Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-14 27-01-2005 வியாழக்கிழமை ஓசை -344




# சுனாமியால் உயிரிழந்தோர் நினைவாக

# தமிழர் தாயகம் எங்கும் துக்கம் அனுஷ்டிப்பு

## நினைவிடங்களில் பல்லாயிரம் உறவுகள் கூடி கண்ணீர்விட்டுக் கதறி அழுத சோகம்

**சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக தமிழர் தாயகப் பகுதியிலும் தென்னாசிய நாடுகளிலும் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு தமிழர் தாயகமெங்கும் நேற்று நடைபெற்றது. தேசிய துக்கதினமான நேற்று தமிழீழத்தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அனர்த்தத்தில் உயிரிழந்தோர் அடக்கம் செய்யப் பட்ட இடங்களில் ஒன்று கூடிய உறவுகள் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி கண்ணீர் பெருக கதறி அழுதமை நெஞ்சை உருக்குவதாக இருந்தது.**

நேற்றுக் காலை முதல் முக்கிய இடங்களிலும், நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களிலும் சோககீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. சுனாமிபேரலை தாக்கிய காலை 8.50 மணிக்கு அனைத்து மக்களும் தமது செயற்பாடுகளை நிறுத்தி அகவணக்கம் செலுத்தினர். இதனையடுத்து உயிரிழந்தவர்கள் நினைவாக மூன்று நிமிடநேரம் மணி ஒலி எழுப்பப்பட்டது. பின்னர் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்ற இடங்களிலும் பொதுச் சுடர்கள் ஏற்றப்பட்டதுடன் உயிரிழந்தோர் நினைவாக புதைகுழிகள் முன்பாக சுடர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



முல்லை நகர் நிகழ்வில் கேணல் சூசை

## பாதிக்கப்பட்டோர் மீள் எழுகின்ற முயற்சியில் சகல மக்களும் ஒன்றிணைய முன்வரவேண்டும்

### தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

இழக்கக் கூடாதவற்றை நாம் இழந்துவிட்டபோதிலும் மீண்டும் எழுகின்ற முயற்சியில் சகல மக்களும் பாதிக்கப்பட்ட மக்களோடு பின்னிப்பிணைந்து இந்த மக்கள் மீள் எழுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவ முன்வர வேண்டும். இவ்வாறு தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 26 ஆம் நாள் கடல் அனர்த்தத்தின்போது முல்லைத்தீவில் சாவடைந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஆழிப்பேரலையானது சிறிய மணித்துளிக்குள் இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் மக்களைக் காவு கொண்டுபோனதன் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு முல்லை வலய கல்விப்பணிமனையின் ஏற்பாட்டில் இன்று நடைபெறுகிறது. சிறார்களின் மன உளச்சலைப் போக்குவதற்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வானது எஞ்சியிருக்கின்ற மழலைகளையும், அவர்களோடு

(11ஆம் பக்கம் பார்க்க)



உடுத்துறை நிகழ்வில் மங்களேஸ்

## படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் நினைவு நிகழ்வுகள்

ஆழிப்பேரலையில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு மட்டு அம்பாறை மாவட்டத்தில் உணர்வு பூர்வமாகக் அனுஷ்டிக்கப்பட்டது.. முதலாவது நிகழ்வு நேற்றுக் காலை அம்பாறை அரசியல்துறை செயலகத்திலும், இரண்டாவது நிகழ்வு சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் நலன்புரி நிலையத்திலும் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் தளபதி ராம், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப பாளா

(11ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்குதல்

யாழ்.நகரையண்டிய பண்ணைக் கடற்பரப்பினில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் மீது நேற்றுப் படையினர் தாக்குதல்களை நடத்தியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகரின் கரையோரக் கிரா மமான கொட்டடிப் பகுதியைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -சுனாமி பேரலை அனர்த்தத்தில்-

## தாய், தந்தையரை இழந்த சிறாருக்கு 10 ஆயிரம் ரூபா வங்கி வைப்பு

சுனாமி பேரலையின் தாக்கத்தினால் தாய், தந்தையரை இழந்த சிறார்களுக்கு ஜெர்மன் உறவுகளின் உதவி நிதியிலிருந்து 10,000 ரூபா வீதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரிடம் ஜெர்மனிய மக்களினால் கையளிக்கப்பட்ட ஒரு தொகை நிதியிலிருந்து மேற்படி அனர்த்தத்தினால் தாய், தந்தையரை இழந்த சிறார்களின் பெயரில் வங்கியில் ரூபா 10.000 வீதம் வைப்பிலிடப் பட்டது.

நேற்று காலை 11.30 மணிக்கு சமாச வளாகத்தில் வைத்து வைப்பிலிடப்பட்ட சிறார்களுக்குரிய

(12ஆம் பக்கம் பார்க்க)



### புதுக்குடியிருப்பு–கேப்பாப்புலவு வீதியில்

## உந்துருளி–கனரக வாகன விபத்தில் இரு சிறுமியர் உட்பட மூவர் பரிதாப மரணம்

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு சிறுமிகள் உட்பட மூன்று பேர் பரிதாபகரமாகஉயிரிழந்தனர்.

நேற்று மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வற்றாப்பளையிலிருந்து செம்பியன்பற்றுக்கு செல்லும் நோக்குடன் கேப்பாபுலவு-புதுக்குடியிருப்பு வீதியில் வந்துகொண்டிருந்த உந்துருளி மீது புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாப்புலவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த டிப்பர் பிள்ளையார் கோவிலுக்கருகில் மோதியது.

இதன்போது உந்துருளியில் வந்த நெல்லியான் செம்பியன் பற்றைச் சேர்ந்த தங்கராசா-பாஸ்கரன் (வயது35) என்பவரும் இவரது மகள் தனுசா(வயது13) என்பவரும், வற்றாப்பளையைச் சேர்ந்த புஸ்பராசா ஜீவனா(வயது 13) என்பவரும் அவ்விடத்தில் பரிதாபமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 'சுனாமி' பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தோரை நினைவு கூர்ந்து பல பகுதிகளிலும் நிகழ்வுகள்

சுனாமி பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து நேற்றுப் பல்வேறு பகுதிகளிலும் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

நேற்று மன்னார் பேருந்து நிலையத்தில் மாலை 4.30 மணியளவில் பல்லாயிரக்கணக் கான மக்கள் பங்கேற்க நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் இந் நிகழ்விற்குத் தலைமை தாங் கினார் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை சிறுமிகள் இருவர் ஏற்றினர் • அதனைத் தொடர்ந்து 31 நினைவுச் சுடர்களை மன்னார் நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் வசந் தன், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் முடியர சன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர் இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் நினைவுச்சின்னத்திற்கு மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் அவர்கள் மலர் மலை அணிவித்தார். மலர் அஞ்சலியைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. தலைமை உரையினை மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புகளின் தலைவர் ஆற்றினார் பௌத்த மதத்தின் பிரதிநிதி அல்கேகம தம்பரத்தின தேரர் அவர் களும் இந்து மதசார்பில் மனோதரசர்மா குருக்கள் அவர்கள், முஸ்லிம் சமய சார்பில் மௌலவி அசீம். கிறிஸ்தவமத சார்பில் அருட்தந்தை விக்டர்சூசை ஆகியோர் இரங் கல் உரையாற்றினார்கள்• தொடந்து மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் உரையாற்றினார்.

மன்னார் புனித சபேரியார் பெண்கள் பாடசாலை மாணவிகளும் புனித சபேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் கவிதை வாசித்தனர்• இதனைத் தொடர்ந்து வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உட்படப் பலர் உரையாற்றினர்.

சுனாமி தாக்குதல் காரணமாக மரண மானவர்களை நினைவு கூரும் முகமாக நேற்று மன்னார்புனிதசெபத்தியார்பேராலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த வழி பாட்டில் கலந்துகொண்டு கண்ணீர்மல்க தமது அஞ்சலியைச் செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்திக்காகப்பிரார்த்தித்தனர்.

இதேசமயம் நேற்றுக்காலை 9.00 மணிக்கு மன்னாரில் உள்ள சகல தேவால யங்கள், கோயில்கள், பள்ளிவாசல்களில் மணிகள் ஒலிக்க, மௌன அஞ்சலி செலுத் தினர். அனைத்து மக்களும் தமது வீடுகளி லும், வர்த்தக நிலையங்கள், அலுவலகங் களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டு தமது ஆடைகளில் கறுப்பு நிறப்பட்டிகள் அணிந்து துக்க தினத்தை அனுஷ்டித்தார் கள். பாண்டியன்குளம், துணுக்காய் பிர தேசங் களில் சுனாமி பேரலைத்தாக்கத் தினால் உயிரிழந்தவர்களின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு கிராம சேவையாளர் சி.சண்முகநாதன் தலை மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஈகச்சுடரினை கரும்புலி மாவீரன் கப்டன் மொறிஸ் அவர்களின் தந்தை தர்மபாலசிங்கம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் ஏற்றிவைத்தார். நினைவுரை களை பத்மநாதன் ஊரகத் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் இளவககுமார் ஆசிரி யர் சிவசக்திமோகன், மாலதி படையணிப் போராளி செல்வி. கோமதி ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் 'சுனாமி வேண்டாம்' என்ற கவிதையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வு மல்லாவி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காலை 8.30 மணியளவில் ஆலோசகர் அம்பிகைபாலன் தலைமையில் நடைபெற்றது. தமிழீழ தேசியக்கொடியினை மல்லாவி மாவட்ட நீதியாளர் செல்வி வே.அல்லிராணி ஏற்றி வைக்க பொதுஈகச் சுடரினை நீதியாளர் செல்வி மங்களேஸ் ஏற்றிவைத்தார். நினைவுரைகளும் இடம் பெற்றது.

சுனாமியில் உயிரிழந்தவர்களின் 31 ஆம் நினைவு நிகழ்வு நெடுங்கேணி மகாவித்தி யாலயத்தில் காலை 9.00 மணிக்கு குளவி சுட்டான் அ.த. க. பாடசாலை அதிபர் சிவலிங் கம் தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட துணை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தென்னவன், வவுனியா வடக்கு ப.நோ. கூட்டு றவுச் சங்க பொது முகாமையாளார் இராசரட் ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர் தேசியக் கொடியினை நெடுங்கேணி பிதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார் தொடர் ந்து அகவணக்கம் இடம்பெற்று தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன இதில் பெரும ளவானோர் கலந்துகொண்டனர்.

வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் சாவடைந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வு காலை 8.45 மணிக்கு அரசியல் துறையைச் சேர்ந்த இராமஜெயம் தலைமையில் இடம்பெற்றது. தேசியக்கொடி யினை வட்டக்கச்சிப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஈகச்சுடரினை தேசிய எழுச்சிப் பேரவை செயலர் மற்றும் வட்டக் கச்சிப் பிரதேச காவல்பணிமனைப் பொறுப் பதிகாரி ஏற்றி வைத்தனர். நினைவுரையினை தேசிய எழுச்சிப்பேர வைச் செயலர் பொன்னுத்துரை நிகழ்த்தி னார். இந்நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தகர்கள்,பல்வேறுதுறைசார்ந்த பிரமுகர் கள் போராளி கள் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இம் மக்களின் நினைவாக கிளிநொச்சி கலாச் சார மண்டபத்தில் நேற்றுக் காலை கிளி நொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் சர்வமத வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு கிளி நொச்சி அரச செயலக வளாகத்திலிருந்து சர்வமதத்தலைவர்கள் ஊர்வலமாக கலாச்சாரமண்டபத்திற்கு வருகை தந்தனர்.

அரச அதிபர் மேலதிக அரச அதிபர், தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் ஆகியோர் சர்வமதத்தலைவர்களுடன் இணைந்து வர, தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், அரச அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள்,சமயத் தொண்டர் கள் ஏ 9 பிரதான வீதி வழியாக ஊர்வல மாக கலாச்சார மண்டபத்தினை வந்தடைந் தனர்.

பொது ஈகச்சுடரினை சர்வமதத் தலைவர் கள் ஏற்றிவைக்க, நினைவுப்படத்திற்கான ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றிவைத்து மலர் மாலை அணிவித்தார்.

தலைமையுரையினை தொடர்ந்து ஆத்மாஞ்சலிநிகழ்வு இடம்பெற்றது இந்து, கிறிஸ்தவ, .முஸ்லிம், புத்த மதத்தலை வர்களின் மேற்படி ஆத்ம அஞ்சலிப் பிரார்த் தனை இடம்பெற்றது.

தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் மற்றும் அரசறி வியற் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா ஆகியோர் நினைவுரைகளை வழங்கினர். (சோ, 12, 08, 24,18,)

# உங்கள் துயரம் உலகத்துக்கான துயரமாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது

**-வடமராட்சி கிழக்கு நினைவு நிகழ்வில் பாலகுமாரன்**

இந்தத்துயரம் உங்களுக்கான துயரம் மட்டுமான தல்ல. இந்த உலகத்துக்கான துயரமாக மாறியுள்ளது. இந்தத் துயர நாள் உலக வரலாற்றிலே மறக்கமுடி யாத நாளாகப் பதிவுசெய்யப்பட்டுக்கொண்டிக்கிறது. இந்தத் துயரத்தின் வலியை உங்கள் இதய அறை களில் இவர்களை நினைவு கூருவதற்காக சேமித்து வையுங்கள். அதேவேளை நாங்கள் மீளவாழ்தலுக் குரிய துணிவையும், ஆற்றலையும் பெற்றுக் கொள் ளக்கூடிய நாளாகவும் இந்த நாளை மாற்றிக் கொள்ள வேண்டும். என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் அவர்கள் சுனாமியில் உயிரிழந்தவர்கள் நினைவாக வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆற்றிய உரை யின்போது தெரிவித்தார்.

எங்கள் உறவுகளுக்காக துன்பப்படும் இந்த வேளையிலே எங்களோடு சேர்ந்து வீழ்ந்துபட்ட அனைத்து மக்களுக்கான துயரையும் நாங்கள் இந்த வேளையில் சுமந்து கொள்கிறோம். சிங்களத் தோழர் கள் முஸ்லிம் மக்கள்,தமிழ்நாட்டில் இறந்து போன தமிழ் மக்கள் உட்பட ஆசியாக் கண்டத்தில் இறந்து போன மக்கள் அனைவரது துயரத்தையும் அவர் களுடன், சேர்ந்து நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். எங்கள் தாயகத்தில்தான் மிகப்பெரிய இழப்பு ஏற் பட்டது. அதிலும் தென் தமிழீழத்தில்தான் பெரும் இழப்பு ஏற்பட்டது.மொத்த உயிரிழப்புக்களில் பெரும் பகுதி அங்கேதான் நடந்தேறியுள்ளது. இன்னமும் கணக்குக்காட்ட முடியாத காணாமல் போனோர். பட்டியலில் இருக்கக்கூடிய அனைவரையும் சேர்ப் போமானால் 40000 இற்கும் அதிகமான உடன் பிறப்புக்களை நாங்கள் இங்கே இழந்திருக்கிறோம்.

இதில் அரைப்பங்குக்கு மேற்பட்டவர்கள் தென் தமிழீழத்தில் இருப்பதை எண்ணி நாங்கள் வேதனை அடைகிறோம். தமிழீழத்தின் கடற்பரப்பில் ஆயிரம் கிலோமீற்றர் பரப்பில் 800 கிலோ மீற்றர் பரப்பு மொத்தமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 60% மான எங்கள் தாயகத்தின் வாழ்வு அழிந்து விட்டது. 41 பிரதேசசெயலர் பிரிவுகளில் 78000 இற் கும் அதிகமான மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த எங்கள் தமிழ் உறவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 75000 இற்கும் அதிகமான மக்களின் வதிவிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எங்களிடம் எஞ்சிப்போயிருந்த 13000 இற்கும் மேற்பட்ட கடல் கலன்கள் முற்றாக அழிந்துபோயிருக்கின்றன, 148 இற்கும் மேற்பட்ட கல்லூரிகள் அழிந்து போய்விட்டன. 21 இற்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் அழிந்து போய்விட்டன.

இவை எல்லாம் அழிந்தாலும் கூட எங்களின் உயிரையும், உடலின் துணிவையும் எங்களுடன் இருப் பதை எண்ணிக்கொண்டு எங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக நாங்கள் இங்கே ஒரு சபதத் தையும் எடுத்துக்கொள்ள கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இன்று எஞ்சி இருக்கின்ற நாங்கள் எங்களை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவை இந்த இடத்தில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் நாங்கள் வாழ்வோம். இறுதியில் கடல் சென்று மீள்வோம். கடலால் எங்கள் வாழ்வைக் கட்டி அமைப்போம். என்ற முடிவில் நாங்கள் இன்று கூடி இந்தத் துயரத்தை பொதுத் துயரமாகப் பங்கிட்டுக்கொண்டிருக்கிறோம். இதி லிருந்து மீள்வதற்காக ஒரு அற்புதமான வாழ்க்கைத் திட்டத்தை அடைவதற்காக நாம் முயன்று கொண்டிருக் கின்றோம். இந்த வேளையில் ஒட்டுமொத்தமான தேசத்தின் துயரத்தை, மக்களின் துயரத்தை, தலை மையின் துயரத்தை, இயக்கத்தின் துயரத்தை இங்கே பகிர்ந்து கொண்டு எல்லோரும் சேர்ந்து மீண்டெழு வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)


## வரிவிளம்பரம்

### இந்துநாகரிக கருத்தரங்கு

2005 பரீட்சை எடுக்கும் மாணவர்களிற்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் 2005.01.29 காலை 9 மணிக்கு நடைபெறும் இடம் கேம்பிறிச் கல்லூரி, உதய நகர்,கிளிநொச்சி. ஆசிரியர் திரு. S.ரமேஸ். (5613)

### தவறிவிட்டது.

26.01.2005 அன்று முல்லைத்தீவில் ஆற்று கைப்படுத்தல் நிகழ்வு நடைபெற்ற இடத்தில் கறுப்பு நிறக் கைப்பையொன்று தவறிவிட்டது. அதனுள் வே. அமராவதியின் நிரந்தரப்பயண அனுமதி அட்டை யும், அஞ்சல் அட்டையும், இரு தமிழீழ வைப்பகப்புத் தகங்களும்,ஒரு கைக்கடிகாரமும் திறப்பொன்றும், உள் ளன. இதனைக் கண்டெடுத்தோர் புலிகளின் குரல் பணிமனை, செஞ்சோலை வள்ளிபுனம், செஞ்சோலை திருவையாறு ஆகிய முகவரிகளில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தகவல்:-வே.அமராவதி (5471)

## தவறிவிட்டது

**25.01.2005 அன்று கிளிநொச்சிக்கும், வட்டக்கச்சிக் கும் இடையில் ஆண்களுக்கான கைச்செயின் ஒன்று தொலைந்து விட்டது. யாரும் எடுத்திருந்தால் அதனை ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டு கின்றோம். ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங் கப்படும்.** (5614)


## சாவு அறிவித்தல்



### செல்லையா ரஜனிகாந் [சங்கமன்]

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ரஜனிகாந் (சங்கமன்) அவர் கள் நேற்று முன்தினம் (25.01.2005) செவ்வாய்க்கிழமை காலமாகி விட் டார். அன்னார் செல்லையா (ஸ்கைவே -கல்வியங்காடு) கேதீஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், இந்திரசித்து - மனோன்மணி தம்பதி களின் மருமகனும் கஜேந்தினியின் (ஜெயந்தி) அன்புக்கணவரும், ரமணிக்காந் ரதனி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி, ஜெயலட்சுமி, புவனேஸ்வரி, மைதிலி, சுஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பாலசுப்பிரமணியம், புஸ்பராசா,சசிக்குமார்ஆகி யோரின் சகலனும், வாகீசன், விவிதன், தூரிகா, பிரவீனன், வினுகா ஆகி யோரின் சிறியதந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4/ 2 அம்பாள் வீதி, நாயன்மார்க்கட்டில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று 27.01.2005 வியாழக்கிழமை 1.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**4/2 அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**நல்லூர்.** (சி.11098)

தகவல்,
**குடும்பத்தினர்.**

# ஈராக்கில் தேர்தலை குழப்ப தீவிரவாதிகள் கடும் முயற்சி

# உலங்கு வானூர்தி விபத்தில் 31 அமெரிக்கப் படையினர் பலி!

## – வெள்ளிக்கிழமை முதல் ஊரடங்கு அமுல்

(பாக்தாத்)

**ஈராக்கில் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தத் தயார் படுத்தப்பட்ட பாடசாலைகள் பலவற்றில் அமெரிக்கப் படையினருக்கு எதிராக நேற்று பல தாக்குதல்களை ஈராக் தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர். அத்துடன் பாக்தாத்திற்கு மேற்கே அமெரிக்க உலங்கு வானூர்தி வீழ்ந்து நொருங்கியதில் 31 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்.**



தாக்குதல் நடந்த பகுதியொன்றில்....

பாக்தாத்தின் வடக்கே ரியாத்தில் மூன்று கார்க் குண்டுகள் வெடித்துள்ளன. இத்தாக்குதல்களில் மூன்று பொலிசார் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். 9பேர் காயமடைந்துள்ளனர். ஒரு கார்க்குண்டு அமெரிக்கப் பாதுகாப்புத் தொடரணியை குறிவைத்து நடத்தப் பட்டுள்ளது. ஆனால் காயப்பட்டவர், இறந்தவர்கள் பற்றிய அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. இத்தாக்குதல் பாக்தாத் விமான நிலைய வீதியில் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் ஒரு வாகனம் அழிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்அமெரிக்கப்படையினரால் பாக்தாத்பிரதேசத்தைச் சூழவுள்ள பகுதியில் வேறுவேறான இடங்களில் கிட்டத் தட்ட 6 வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஈராக் பொலிசார் இரண்டு குண்டுகளை ஷியா முஸ்லிம்களின் புனித நகரான நஜாப் நகரில் கண்டெடுத்துள்ளனர்.

ரமாடி பிரதேசத்தில் கிளர்ச்சிக்காரர்களிற்கும் அமெரிக் கப்படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன. இதில் ஒரு ஈராக்கியர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவிரவாதிகள் ஞாயிறன்று தேர்தலுடன் தொடர்புள்ள கட்டடங்களை அழிப்பதுடன் வேட்பா ளர்களையும் அச்சுறுத்தும் வகையில் இரவு வேளைகளில் தாக்குதல்களை நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக ஒரு பாடசாலையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த குண்டு கண்டு பிடிக்கப்பட்டுஅழிக்கப்பட்டதுடன் இரு பாடசாலைகள் குண்டுத்தாக்குதலிற்கு இலக்காகியு முள்ளது.

ஈராக் அரசாங்கம் வெள்ளிக்கிழமையில் இரு மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தைத் தடை செய்யும் வகையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

மற்றுமொரு தாக்குதல் பாக்தத்தின் வடக்கேயுள்ள கொம் யூனிஸ்கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடத்தப் பட்டுள்ளது. சேத விபரம் தெரியவரவில்லை.

இது இவ்வாறிருக்க மேற்கு ஈராக்கிற்கு அமெரிக்கக் கடற்படையினரைக் காவிச்சென்ற உலங்கு வானூர்தி பாக் தாத்திற்கு மேற்கே 220மைலுக்கு அப்பாலுள்ள றற்பாநகரிற்கு அண்மையாக நேற்றுக் காலை 1.20 மணியளவில் விழுந்து நொருங்கியுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைக்காக முத



வீடுவீடாகத் தேடுதல்

லாவது அமெரிக்கக் கடற்படைப் பிரிவிலிருந்து படை யினரை ஏற்றியிறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த உலங்கு வானூர்தியே இவ்வாறு விழுந்து நொருங்கியதாக அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன 31 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.



நவீன ஸ்ரிங்கர் ரக விமான எதிர்ப்பு ஏவுகணையுடன் காணப்படும் அமெரிக்க இராணுவ வீரர்.

# சிரியாவுக்கு ரஷ்யா ஆயுதம் வழங்கல்

சிரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீண்ட நாட்களாக பகையிருந்து வருகிறது. சிரியா அணு குண்டு தயாரிப்பதிலும் நவீன ஆயுதங்கள் தயாரிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் அமெரிக்கா புகார் கூறியுள்ளது. இந்த நிலையில் சிரியாவுக்கு நவீன ஆயுதங்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது.

சிரியா சனாதிபதி அல்ஆசாத் பஷீர் - ரஷ்ய சனாதிபதி விளாடிமீர் புட்டின் இடையே நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத் தாகியிருக்கிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடு களின் எதிர்ப்பை மீறி சிரியாவுக்கு ரஷ்யா ஆயுதம் வழங்கவுள்ளது.

# அழகுராணிப் போட்டிகளை பாடசாலைகளில் நடத்தத் தடை

(பீஜிங்)

சீனப்பாடசாலைகளில் அழகு ராணிப்போட்டிக்கு பீஜிங் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இத்தகைய கேளிக்கைகளுக்கு இதுவரைகாலமும் எதி ராக இருந்து வந்த சீனா அண்மைக் காலத்தில் அழகு ராணிப்போட்டிகளை நடத்துவது தொடர்பான விதிகளைத் தளர்த்தியுள்ள போதிலும் பாடசாலைகளில் இந்தப் போட்டி களை நடத்துவதற்குத் தடைவிதித்துள்ளதென சீனாவின் செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

# உயிருக்கு போராடும் அமெரிக்கர் தொடர்பான ஒளிநாடா வெளியீடு

(பாக்தாத்)

ஈராக்கில் கிளர்ச்சியாளர்கள் நேற்று வெளியிட்ட வீடியோ நாடாவில் அமெரிக்கக் கைதி ஒருவர் தமது உயிருக்காகப் போராடுவதையும் கிளர்ச்சிவாதிகள் பாக்தாத்தின் சிரேஸ்ட நீதிபதி ஒருவரைப் படுகொலை செய்வதையும் காண்பித்துள்ளது.

ஈராக்கில் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நட பெறவிருக்கையில் தேர்தலுக்குகெதிரானவர்கள் வன்முறையை முடுக்கி விட்டுள்ளார்கள். அமெரிக்க ஒப்பந்தக்காரரான றோய்களுன்ஷம் மற்றும் 5 சகாக்களும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கிளர்ச்சி வாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டார்கள்.

இந்த வீடியோ நாடாவில் அமெரிக்கரான றோய் பீதியுற்ற நிலையில் தம்மைக் கொல்ல வேண்டாமென கிளர்ச்சிவாதிகளிடம் மன்றாடிக் கேட்பதைக் காண்பித்துள்ளது.

இவருடன் கடத்தப்பட்டுப் பணயம் வைக்கப்பட்டிருந்த 4பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அதேசமயம் பிலிப்பைன்ஸ் நாட் டைச் சேர்ந்த மற்றைய 5ஆம் நபருக்கு என்ன நடந்தது என்பது பற்றி மர்மம் நிலவுகின்றது.

# ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினர் இரண்டு ஆண்டுகள் நிலை கொண்டிருப்பர்!

## – உயர் இராணுவ அதிகாரி கருத்து

(வோஷிங்டன்)

ஈராக்கில் நிலை கொண்டி ருக்கும் அமெரிக்க இராணுவம் அந்தநாட்டில் .தேர்தல் நடந்த போ திலும் கூட மேலும் 2ஆண்டுகள் அங்கு நிலை கொண்டிருக்கும் என்று அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் சதாம்ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு அங்கு தீவிரவாதத்தை ஒடுக்கும் பணியில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டது. ஈராக்கில் இப்போது ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வருகிற 30ஆம் திகதி ஈராக்கில் பாராளு மன்றத் தேர்தல் நடக்க இருக் கின்றது. அதன் பிறகு ஈராக்கி யர்கள் ஆட்சி ஏற்படும். அப்போது வெளிநாட்டுப்படை திரும்பப் பெறப்படுமா? என்ற கேள்வி எழுந் துள்ளது.

இந்த நிலையில்தான் ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்ய அமெரிக்க இராணுவத்தலைமை யகம் திட்டமிட்டுள்ளது. என்று மூத்த இராணுவத் தளபதி ஒருவர் கூறினார்.

இந்த 2 ஆண்டுகளில் ஈராக் இராணுவத்திற்கு அமெரிக்கா பயிற்சி அளிக்கும். ஏற்கனவே பயிற்சி பெற்ற ஈராக்கிய இராணுவ வீரர்கள் பாதுகாப்புக்குப் பொறுப் பேற்றுள்ளதால் அமெரிக்க இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 1இலட்சத்து 20ஆயிரமாகக் குறைக் கப்படும் என்றும் அவர் கூறினார்.


# 2007 இற்கு சுனாமி எச்சரிக்கைக் கருவி; இந்தியா திட்டமிட்டுள்ளதாக அறிவிப்பு

இந்தியாவில் வரும் 2007ஆம் ஆண்டுக்குள் சுனாமி எச்சரிக்கைக் கருவி செயற்படத் தொடங்கி விடும் என்று சீனாவில் நடந்த சீன- ஆசிய சுனாமி எச்சரிக்கை மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனத்தலைநகர் பீஜிங்கில் இரண்டு நாட்கள் நடந்த மாநாட்டை சீன பூகம்ப நிர்வாக அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இந்தியா, இலங்கை, இந்தோ னேசியா, தாய்லாந்து உட்பட சுனாமியால் பாதிக்கப் பட்ட நாடுகளைச் சேர்ந்த பூகம்ப மற்றும் கடல் ஆய்வு நிபுணர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் மாநாட்டில் பங்கேற்ற மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பூகம்ப ஆய்வு பிரிவின் தலைவரும் ஆலோசகருமான ஜி.டி.குப்தா பேசுகையில், "இந்தியாவின் சுனாமி எச்சரிக்கைக் கருவி 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத் திற்குள் பொருத்தப்பட்டு விடும் 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திற்குள் இந்தக் கருவி முழு வீச்சில் செயற்படத் தொடங்கிவிடும். சுனாமி எச்சரிக்கைக் கருவியை சுயமாகத்தயாரிக்கும் அளவுக்கு இந்தியாவின் தொழில்நுட்பம் வலுவுடன் உள்ளது.

இந்தியப் பெருங்கடலிலுள்ள மற்ற நாடுகளுக்கும் இந்தக் கருவியைத் தர இந்தியா தயாராகவுள்ளது. சுனாமி தாக்குதலுக்குப் பிறகு இது குறித்து ஆய்வு நடத்த இரண்டு நாள் மாநாடு நடத்தப்பட்டது. இதில் 100 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் பூகம்ப மற்றும் கடல் ஆய்வு நிபுணர்கள் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கினர். இந்த மாநாட்டில் எடுக் கப்பட்ட முடிவுகளின் படி இந்தியா விரைந்து செயற் படத் தொடங்கியுள்ளது." என்றார் இந்தியா வானிலை ஆய்வு மையத்தைச் சேர்ந்த பூகம்ப ஆய்வுப் பிரிவின் இயக்குனர் ஆர்.எஸ் தத்தாதிரேயா சுனாமிப் பேரழிவு குறித்த இந்திய ஆய்வுக் கட்டுரையை இந்த மாநாட்டில் சமர்ப்பித்தார்.



சுனாமி தாக்குதலில் அழிவுற்ற கட்டட இடிபாடுகளுக்குள் இறந்த உறவினர்களின் உடலைத்தேடும் இந்தனேசிய ஆஷே மக்களை படத்தில்காண்க.

# சுனாமியால் திருமலை மாவட்டத்தில் உயிரிழப்பு 979; காணாமல் போனோர் 337

## மாவட்டச் செயலகம் அறிவிப்பு

(திருகோணமலை)

**சுனாமி அனர்த்தம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 979 என்றும் இன்னும் 337 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் திருகோணமலை மாவட்டச் செயலகம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.**

உயிரிழந்தோரில் 968 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. 11 சடலங்கள் அடையாளங் காணப்படாமல் புதைக்கப்பட்டன. பிரதேச செயலர் பிரிவு வாரியாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை வருமாறு;

கிண்ணியா -374, மூதூர்- 288, குச்சவெளி - 159, திருமலை நகரமும் சூழலும் -84 வெருகல்52, சேருவில் -05, பதவிசிரிபுர -06, திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் உயிரிழந்தவர்களில் 11 பேரின் சடலங்களே அடையாளங் காணப்படாமல் புதைக்கப்பட்டன. காணாமற் போனவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு; கிண்ணியா -150, வெருகல் -100, மூதூர் -77, குச்சவெளி08, திருமலை நகரமும் சூழலும்02,

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில், 42 நலன்புரி நிலையங்களில் மொத்தம் 5000 குடும்பங்களைச் சேர்ந்த 19,559 பேர் வாழ்கின்றனர். பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக எண்ணிக்கை வருமாறு:-

கிண்ணியா- 08 நிலையங்கள் -1249 குடும்பங்கள். 5257 பேர், குச்சவெளி- 10 நிலையங்கள் - 1324 குடும்பங்கள், 5036 பேர். வெருகல் -2 நிலையங்கள்- 258 குடும்பங்கள், 1042 பேர், திருமலை நகரமும் சூழலும் -14 நிலையங்கள் -878 குடும்பங்கள், 2928 பேர். மூதூர்- 8 நிலையங்கள்- 1291 குடும்பங்கள்- 5296 பேர்.

சுனாமி அனர்த்தத்தினால் நேரடியாகவும், பொருளாதார ரீதியாகவும், 30,706 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 27,774 பேர் பாதிக்கப்பட்டனர். பிரதேச செயலர் பிரிவு வாரியாக விபரம் வருமாறு;

கிண்ணியா -7201 குடும்பங்கள் 34,467 பேர், குச்சவெளி-7687 குடும்பங்கள்- 28603 பேர், வெருகல் -1412 குடும்பங்கள் - 5660 பேர், திருமலை நகரம்- 10783 குடும்பங்கள்- 43,663 பேர், மூதூர் -3454 குடும்பங்கள்- 14727 பேர், சேருவில் -169 குடும்பங்கள்-654 பேர். (25)

# அடிக்கல் நாட்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(பூநகரி)

பூநகரிக் கோட்டத்தில் 4ஆம் கட்டைப் பிரதேசத்தில் உள்ள சிறீவிக்கினேஸ்வரா வித்தியாலய பாடசாலைக்கான "கார்ப்" கருத்திட்டத்தின் கீழ் நிக்கொட் நிறுவன நிதி உதவியுடன் வலயக் கல்விப் பணிமனையில் அமைக்கப்படும் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் புலமைப் பரிசில் பாராட்டு விழாவும் கடந்த 19ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பிரதம சிறப்பு கௌரவ விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். அதனைத்தொடர்ந்து மங்கல விளக்கை பிரதம விருந்தினரான அரச அதிபர். தி.இராசநாயகமும், சிறப்பு விருந்தினரான வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஏற்றினர். தேசியக் கொடியைப் பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேங்கைத் தமிழன் ஏற்றியதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆசியுரையை அரச அதிபர் ஆற்றினார். பின்னர் அடிக்கல்லை அரசாங்க அதிபர் நாட்டி வைக்க, தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர், நிக்கொட் பொறியியலாளர் பார்த்தீபன், கடற்புலி அரசியல் துறைப் பொறுப்பாளர், பூநகரிப் பங்குத் தந்தை தியோ ஆம்ஸ்ரோங், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், ஆசிரியர் வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர் த.பாலசிங்கம், அதிபர் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

பின்பு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பொது மண்டபத்தில் அதிபர் க.ஞானசீலன் தலைமையால் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து அரச அதிபர் ஆண்டு 5 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவியையும் ஆசிரியரையும் பாராட்டி உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரைகளை கிளி. மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், கடற்புலி அரசியல் துறைப் பொறுப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஆற்றியதைத் தொடர்ந்து ஆண்டு 5 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவி சுவஸ்திகா பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இறுதியாக புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவிக்கு ஆசிரியருக்கும், அதிபருக்கு அன்பளிப்பாக பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பின்னர் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.பூரணலிங்கத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது (34)

-வடமராட்சி கிழக்கில்-

# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு இறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் சுனாமி கடற்பேரலையில் உயிர் இழந்தவர்களுக்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து 23.01.2005 ஞாயிற்றுக் கிழமை யாழ். கச்சேரியிலிருந்து வருகை தந்த உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் எடுக்கத் தவறியவர்களின் மரணச் சான்றிதழ்கள் அந்தப் பகுதி கிராம சேவையாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது கிராம சேவையாளர்கள் தமது பகுதியில் உள்ள இறந்தவர்களின் மரணச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றார்கள் (11)

# நிவாரணம் வழங்குவதில் திருமலை மக்கள் புறக்கணிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் வழங்கும் விடயத்தில் புறக்கணிப்புக்குள்ளாகியிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது. கிண்ணியா உலமா சபை, கிண்ணியா இஸ்லாமிய வாலிப முன்னணி, செரண்டிப் பவுண்டேஷன் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழு, கிண்ணியா உலமா சபையின் தலைவர் மௌலவி கே.உதுமா லெப்பை தலைமையில் கடந்த திங்கட்கிழமை காலை திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரைச் சந்தித்து, இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது. தூதுக்குழுவினர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். "எங்கள் பகுதியை நாம் வளப்படுத்துவதைச் சகிக்க முடியாத சக்திகள் முஸ்லிம், தமிழ் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதில் முயற்சிக்கின்றன. இந்த ஆபத்தான சூழ்நிலையில் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு இடையேயான ஒற்றுமை இறுக்கமாகப் பேணப்பட வேண்டும். இது இன்றியமையாததாகும். நாட்டின் மத்திய, மேற்கு பிரதேசங்கள் வளர்ச்சி கண்டுள்ளன. சுனாமியின் பின்னர் தென் பகுதியைக் கட்டியெழுப்புவதில் தீவிரம் காட்டப்படுகிறது. ஆனால், வடக்கு- கிழக்கு தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ள" என்று தூதுக்குழு அம் மகஜரில் தெரிவித்துள்ளது. "கிண்ணியா, தம்பலகாமம், ஆலங்கேணி பிரதேசங்களில் நெற் செய்கை முற்றாக அழிந்து விட்டது. சுனாமியால் தனியார் நிறுவனங்கள் அழிந்து விட்டன. ஆரம்பத்தில் பொலிஸ் நிலையங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பதியப்பட்டன. நிவாரணம் வழங்கப்படும் போது அப் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் என்று பொலிசாரால் கணிக்கப்பட்டவர்கள் தற்போது ஏன் புறக்கணிக்கப்படுகின்றார்கள்? மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் இதற்குப் பரிகாரம் காண நடவடிக்கை எடுங்கள்" என்று மகஜரில் கோரப்பட்டிருந்தது. பின்னர் தூதுக்குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், "சுனாமி அழிவு தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் திருகோணமலை மாவட்டச் செயலணியில் நிச்சயம் முஸ்லிம் பிரதிநிதி ஒருவருக்கு இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும். முஸ்லிம் மக்களுடைய உரிமைகள் வழங்கப்பட்டேயாக வேண்டும். முஸ்லிம் மக்களைப் பலவீனப்படுத்துவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார். பிரிந்து நிற்காமல் ஒற்றுமையாக நின்று, சுனாமியால் அழிந்து போன எமது பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்றும் சம்பந்தன் கேட்டுக் கொண்டார்.

-அரசியல் வேண்டாம் நிவாரணம் பற்றிப் பேசுங்கள்-

# திருமலை செயலணிக் கூட்டத்தில் ஜே.வி.பி.யுடன் தமிழர் தரப்பு வாக்குவாதம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளைக் கவனித்துவரும் திருகோணமலை மாவட்டச் செயலணிக்கூட்டம் நேற்று முன்தினம் காலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற போது, திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் ஆகியோருக்கும் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜே சேகராவுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது.

சுனாமி நிவாரணப்பணிகளில் அரசியல் நடவடிக்கைகளுக்கு இடம்கொடுக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கூற, "சுனாமியைப் பற்றிப் பேசுங்கள் அரசியல் பேச வேண்டாம்" என்று எழிலன் ஜயந்த விஜேசேராவுக்குத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் காமினி றொட்ரிக்கோ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு கட்டத்தில், திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிப்படைந்த மீனவர், சேதமடைந்த படகுகள் பற்றிய விபரங்களை ஜே.வி.பியைச் சேர்ந்த கடற்றொழில் அமைச்சரின் பணிப்புக்கு அமைய நியமிக்கப்பட்ட விசேட அதிகாரிகள் திரட்டி வருவதாக ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜே சேகரா தெரிவித்தபோதே, கருத்து மோதல் ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சேதமடைந்த விபரங்களைத் திரட்டுவதற்கு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சின் பேரில் ஆறு விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அதைவிடுத்து ஒரு எம்.பி.யின் சிபார்சில் மட்டும் ஆட்களை நியமிக்கக் கூடாது" என்று தெரிவித்த சம்பந்தன்;

சுனாமி நிவாரணப் பணிகளில் அரசியலைப் புகுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று காரசாரமாகக் கூறினார். கொழும்பில் இருப்பவர்கள் திருகோணமலை மாவட்ட நிலவரம் குறித்து முடிவெடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடற்றொழிலாளருக்கு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு கடற்றொழில் அமைச்சு என்ன உதவிகள் செய்துள்ளது என்று எழிலன் கேட்டதற்கு ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பதிலளிக்கவில்லை. நேற்று முன்தினம் நடைபெற்ற செயலணிக கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கமும், பாராளுமன்ற உறுப்பினரும், திருமலை மாவட்ட புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சருமான நஜீப் அப்துல் மஜீத் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (25)

# மாதிரி விற்பனை நிலையம் அமைக்க வேண்டுகை

(பூநகரி)

பூநகரி மக்களின் நன்மை கருதி பூநகரி ப.நோ.கூ கூட்டுறவுச் சங்கம் வாடியடியில் நவீன மயப்படுத்தப்பட்ட விற்பனை நிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இதனால் நேர விரயத்தை தவிர்க்க முடிவதுடன் தரமான பொருளையும் பெற முடியுமென மக்கள் நம்புகின்றனர். (34)

# சுனாமியால் மருதங்கேணி உ.அ.அதிபர் பிரிவில் 180 மாணவர்கள் உட்பட 1218 பேர் உயிரிழப்பு

(வடமராட்சி கிழக்கு)

சுனாமி கடற் பேரலையின் தாக்கத்தினால் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 180 பாடசாலை மாணவர்கள் உட் பட 1218 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலக புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதேவேளை மருதங்கேணி கோட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான குடாரப்புத் தொடக்கம் சுண்டிக்குளம் வரை உள்ள பிரதேசத்தில் 11 பாடசாலைகளில் ஒன்பது பாடசாலைகளின் மாணவர்கள் 142 பேர் சுனாமி கடற்பெருக்கின் போது சாவடைந்துள்ளார்கள் அதன்படி மாமுனை அ.த.க பாடாசாலையில் 6 மாணவரும், செம் பியன்பற்று றோ.க.த பாடசாலையில் 9 மாணவரும், தாளையடி றோ.க.த பாடசாலையில் 10 மாணவர்களும் மருதங்கேணி இ.த.க பாடசாலையில் 27 மாணவர்களும், உடுத்துறை ம.வி 50 மாணவர்களும், ஆழியவளை சி.சி.த.க பாடசாலையில் 23 மாணவர்களும், வெற்றிலைக்கேணி றோ.க பாடசாலையில் 4 மாணவர்களும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 9 மாணவர்களும், கட்டைக்காடு றோ.க பாடசாலையில் 4 மாணவர் களுமாக மொத்தம் 142 மாணவர்கள் சாவடைந்துள்ளார்கள் என மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து தெரிய வருகின்றது.

## திறப்பு விழா

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழா நேற்று முன்தினம் பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றது.வே. செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரை பா. கனகலிங்கம் ஏற்றி வைக்க, மங்கல விளக்கை சி.சச்சிதானந்தம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து கட்டடத்தினை சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் மாவட்ட செயலாளர் இ.யோ. யோசப்ஸ்ரான்டில் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (08)

# சுனாமிக்குப் பின்னான அரசின் செயற்பாடுகள் சமாதான முயற்சிகளுக்கு எச்சரிக்கை

ப.துஷ்யந்தன்

"பனை அளவில் உயர்ந்து வந்த அலைகள் எமது ஊரைத் தாக்கியழித்து பின் ஒரு பத்து நிமிடங்களில் அடங்கி விட்டது." இது சுனாமிப் பேரலைகளின் தாக்குதல் குறித்து அப்பாதிப்பில் சிக்கித் தப்பியோர்களின் பெரும்பாலான கூற்று.

ஆனால் சுனாமியின் பின் எழுந்த எழுகின்ற உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் இராணுவ அலைகள் சுனாமியை விட மிக ஆபத்தானதாகவே ஈழத்தமிழர்களால் நோக்கப்படவேண்டியுள்ளது. சுனாமியால் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட பகுதி தமிழர் தாயகப்பகுதி என்பதில் இரு வேறு கருத்துக்கிடையாது. இந்தத் தமிழ்ப்பகுதிகளின் அழிவில் ஆதாயம் தேட முனைந்து



சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதி

நிற்கிறது சந்திரிகா அரசு. கடந்த பல ஆண்டுகளாக தமிழ் இனத்தின் மீதான இனஅடக்குமுறைப் போரை நடத்திய சந்திரிகா தலைமையில்லான அரசாங்கம் சர்வதேசத்திடமிருந்து பெருமளவு கடனைப் பெற்றிருந்தது. அந்தக் கடன் சுமை சந்திரிகா கூட்டு அரசிற்கு பெரும் சுமையாக இருந்த காலகட்டத்தில் தான் சுனாமி பேரலை இலங்கைத் தீவைத் தாக்கியது. இதில் வடகிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகள் மிகப்பெரும் அழிவைச் சந்தித்தன.

இந்த நிலையில் சர்வதேச நாடுகள் பல சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவ முன்வந்துள்ளன. பல நாடுகள் தாம் வழங்கிய கடன் தொகைகளைக் குறைத்துள்ளன. இன்னும் சில நாடுகள் தமது கடன் தொகைகளை மீளப்பெறுவதில்லை என முடிவு செய்துள்ளன. இவை எல்லாம் சிறிலங்கா அரசதலைமைக்குக் கிடைக்கும் கிடைக்க இருக்கும் சுனாமிக்குப் பின்னரான அனுகூலங்கள் என்றே கூற வேண்டும். இந்த உதவிகள் சென்று சேர வேண்டிய இடம் உண்மையாக பாதிக்கப்பட்ட இடமாகத் தான் இருக்கவேண்டும். ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கு அவ்உதவிகள் சென்று சேருவதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறானதாக உள்ளது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலில் சர்வதேசத்தின் உதவித் திட்ட அறிவிப்பு எவ்வாறானதாக உள்ளது எனப் பார்த்தால் ஆரம்பகட்டமாக சிறிலங்கா அரசு தம்மிடம் பெற்றகடன்களை இரத்துச்செய்வதிலும், குறைப்பதிலும் தான் தங்கியுள்ளது. இவ் உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகளிற்கு எவ்வாறு கிடைக்க முடியும்.

தமிழினத்தின் மீதான அடக்குமுறைப் போரை தீவிரப்படுத்தவே சிறிலங்கா அரசு உலகிடம் கடனாளியாகியது. இந்தநிலையில் அதேதமிழ்ப்பகுதிகளில் சுனாமி அழிவின் விளைவால் அக்கடன் தொல்லையில் இருந்து சிறிலங்கா அரசு மீள முடிகின்ற நிலை தமிழர்களைப் பொறுத்த வரை சகித்துக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில் சிறிலங்கா அரசானது எப்போதெல்லாம் பொருளாதார நிலையில் பலம் பெற்றிருக்கிறதோ அப்போதெல்லாம் தமிழினம் தமக்கான ஆபத்தாகவே அந்நிலையைக் கருதுகிறது.

இந்த நிலையைத் தெளிவுபடுத்துவதற்கு அண்மைய ஒரு உதாரணத்தைக் கூறலாம்.

இலங்கைத் தீவை சுனாமி தாக்கி பேரழிவை ஏற்படுத்தி நாடே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கையில் சிறிலங்கா அரசோ 1500 கோடி ரூபா பெறுமதியான ஆயுதக்கொள்வனவு செய்வதற்காக ஈரானிடம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டதான செய்தி ஒன்று வெளியானது. இந்நிலை தமிழ் மக்களைப் பொறுத்தவரை எச்சரிக்கையுடன் நோக்கப்படவேண்டிய விடயமாகவே கருதப்பட்டது. ஏனெனில் சிறிலங்கா அரசு படைத்துறை நிலையில் தன்னை வலுப்படுத்திக் கொள்ளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் தமிழ் மக்கள் மீதான யுத்தம் ஒன்று திணிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கவே செய்கின்றன. இப்படிப்பட்ட அனுபவங்களை பெற்றவர்கள் என்ற நிலையில் தமிழ் மக்களின் அச்சம் நியாயமானதே.

இது இவ்வாறிருக்க சந்திரிகாவின் பேரினவாதப்போக்கு அண்மைய நாட்களில் வலுப்பெற்றிருக்கிறது. இதற்கு நிறையவே உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

* ஐ.நா.பொதுச் செயலாளர்களின் வன்னி விஜயத்தைத் தடுத்தமை.

* உலக உணவுத்திட்ட அதிகாரிகள் வட பகுதிக்கு மேற்கொள்ள இருந்த விஜயத்தை தடுக்க எத்தனித்தது. (எனினும் அவர்கள் வன்னி வந்து சென்றனர்.)

* கடந்த 17 ஆம் திகதி சந்திரிகா வெளியிட்ட "சுனாமியால் பாதிப்படைந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம்" எனும் திட்டத்தில் பெரும் பாதிப்பை சந்தித்த வடபகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

இது போன்ற சந்திரிகாவின் பாரபட்சமான இனவாதப் போக்கை பல உலக அமைப்புக்கள் அவதானிக்கத் தவறவும் இல்லை. அண்மையில் ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் "சிறிலங்கா அரசின் நிவாரண வழங்கல் பாரபட்சமானது." எனக் கண்டித்திருந்ததுடன் நிவாரணப் பணிகளை சீரான முறையில் மேற்கொள்ள வேண்டுமென சிறிலங்கா அரசிடம் தெரிவித்திருந்தது.

இவ்வாறான கண்டனங்கள் எழுந்த போதும் தமது இராணுவ முனைப்பை தீவிரப்படுத்துவதில் சிறிலங்கா அரசானது தீவிரமாக உள்ளது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. பிந்திக் கிடைத்த தகவலின் படி சிறிலங்கா கடற்படைத்தளபதி தயா சந்தகிரி விடுத்த வேண்டுகோள் ஒன்றில் சுனாமி நிவாரண நிதியாக வரும் வெளிநாட்டு நிதிகளைக் கொண்டு கடற்படைக்கு கப்பல்கள் கொள்முதல் செய்யப்படவேண்டுமென பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த நிலையைக் கொண்டு பார்த்தால் சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்கப்படுகின்ற சுனாமி நிவாரண நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதை விட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைத்தல் எனும் சாட்டில்' சர்வதேச உதவியைப் பெற்று பலாலி விமான



தயாசந்தகிரி

நிலைய ஓடுபாதை அவசர் அவசரமாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதான செய்தி ஒன்றும் வெளியாகியுள்ளது. இப்படிப்பட்ட இராணுவ முனைப்புக்களை உள்நாட்டில் தீவிரப் படுத்தியிருக்கும் சிறிலங்காஅரசு சுனாமியைச் சாட்டி சர்வதேசத்திடம் இருந்து எவ்வாறான உதவிகளை எந்தெந்த முறைகளில் பெறலாமோ அவ்வாறெல்லாம் பெற எத்தனித்திருக்கிறது.

வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஜி-7 நாடுகள் கூட்டத்தில் உதவியைப் பெறும் நோக்கில் சிறிலங்கா அரசு செயற்படுவதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட அகப்புற சூழ்நிலைகளை தனது வசமாக்கிச் செயற்பட்டு, இராணுவ முனைப்புக்களை தீவிரப்படுத்தும் சிறிலங்கா அரசின் செயற்பாடானது, எதிர்காலத்தில் சமாதான செயற்பாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்விடப் பகுதிகளில் நடமாடித் திரியும் படையினர்.

---

## நிவாரண விநியோகத்தில் அரசு வடக்கு கிழக்கைப் புறக்கணிக்கிறது

### ஐ.தே. கட்சி பா.உறுப்பினர் ராஜிதசேனாரட்ன

(கொழும்பு)

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வடகிழக்குப் பகுதிகளுக்கு அரசாங்கம் நிவாரணங்களை அனுப்பவில்லைஎன ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் அனைவரும் இந்நாட்டுப் பிரஜைகள் புலிகளின் கட்டுப்பாட்டில் வாழும் எமது சகோரர்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இவர்களுக்கு உதவி செய்வது எமது கடமையாகும். இவர்களை அரசாங்கம் புறக்கணிக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கைக்கு வருகை தந்த போது அவரை அங்கு செல்ல விடாமல் இந்த அரசாங்கம் தடுத்து நிறுத்தியது இதன் விளைவுதான் ஜே.வி.பியினரும் பிரதமரும் கிழக்கு மாகாணத்திற்குச் சென்றபொழுது மக்கள் அவர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டனர். வெளிநாட்டு நிதி உதவிகள் யாவும் சனாதிபதி நிதியத்துக்குச் செல்வதை அனுமதிக்க முடியாது. சகல நிறுவனங்களுக்கும் இது பகிர்ந்தளிக்க வேண்டுமெனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஆலங்கேணி முகாமில் சின்னமுத்து தொற்றுநோய்

திருகோணமலை ஆலங்கேணி முகாமில் தங்கியுள்ள சிறுவர்கள் பலருக்கு சின்னமுத்து நோய் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சின்னமுத்து தொற்று ஏற்பட்டவர்கள் முகாமில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக முகாம் பொறுப்பாளர்களில் ஒருவரான நல்லசிவம் தெரிவித்தார். இதே வேளை, திருகோணமலை கடலூர் பகுதியில் சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தினால் பாதிப்படைந்த நிலையில் திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையான மயில்வாகனம் சந்திரசேகரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இவரது குடும்பத்தினர் ஆலங்கேணி அகதி முகாமில் தங்கியுள்ளனர்.

# சுனாமிப்பேரலை அனர்த்தத்தில்

புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வு















முல்லைத்தீவு நகரில் நடைபெற்ற நினைவு நிகழ்வு














கடற்பேரலையால் நிறுத்தப்பட்ட கடிகாரம் இயக்கவைக்கப்படுகிறது




உயிரிழந்த மாணவர்க நினைவாக



ஆற்றுப்படுத்துகை


# சாவடைந்தோர் நினைவு நிகழ்வுகளில்

முள்ளியவளை கற்பூரப்புல்வெளி நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வு





உடுத்துறையில் உள்ள நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வு











கிளிநொச்சியில் நடைபெற்ற சர்வமதப்பிரார்த்தனை





# நிவாரணப் பங்கீட்டில் மோசடி

# 28 அரச அலுவலர் மீது நடவடிக்கை

கடற்கோள் நிவாரணப் பங்கீட்டின் போது மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 28 அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்த போது, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அதிகளவிலான மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சுக்கு கிடைத்துள்ள முறைப்பாட்டையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிவாரண நடவடிக்கைகளின்போது மோசடிகள், குறைபாடுகள் இடம்பெறும் பட்சத்தில் தனது கவனத்திற்கு கொண்டு வருமாறு அமைச்சர் அமரசிறி தொடங்கொட அண்மையில் பாதிக்கப்பட்ட மக்களிடம் கேட்டிருந்தார். இதனையடுத்தே கடந்த வாரம் அமைச்சுக்கு இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் 25 கிராமசேவகர்கள், 2 பிரதேச செயலர்கள், 1 சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் மோசடி செய்த குற்றச்சாட்டுக் குள்ளாகி இருக்கின்றனர். அமைச்சரின் உடனடி பணிப்பின் பேரில் அமைச்சின் அதிகாரிகள் குழு குற்றம் சுமத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை விசாரணைக்கு உட்படுத்தி இருக்கின்றது. இவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் கைது செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்கள் நிவாரணப் பொருட்களை, பதுக்கியது, பாதிக்கப்படாதவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய உரிய நிவாரணத்தைக் குறைத்தல், பணம் பெற்றுக் கொண்டு தமது பகுதிகளுக்கு உட்படாத பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிண்ணியாவில் அடைமழையால்

# ஆயிரம் ஏக்கர் வேளாண்மை நாசம்

கிண்ணியா பிரதேசத்தில் தொடர் அடை மழையினால் சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான வேளாண்மைப் பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பூவரசந்தீவு, கச்சக் கொடி தீவு, பட்டியனூர், தினேரி, கல்லடி வெட்டுவான், கள்ளம் பத்தை, குரங்கு பாஞ்சான், அரை ஏக்கர் போன்ற பகுதிகளில் செய்யப்பட்ட வேளாண்மைகளே வெள்ளத்தினால் அழிந்துள்ளன. அழிந்து போன தமது விவசாயத்துக்கு ஏற்பட்ட நஷ்டஈட்டை வழங்குமாறும் அல்லது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் வழங்குமாறும் விவசாயிகள் கிண்ணியா, பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்விடயம் சம்பந்தமாக கிண்ணியா கமநல சேவை அதிகாரிகளிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

### இயற்கை அழிவுகள் பற்றி பாடத்தைப் போதிக்க முடிவு

(கொழும்பு)

சுனாமி பேரலை அழிவுக்குப் பின் இயற்கை அழிவுகள் பற்றிய பாடத்தைச் சேர்ப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெள்ள அபாயம், பூமி அதிர்வு, வரட்சி, கடல் கொந்தளிப்பு, காட்டுத்தீ இவைகள் சம்பந்தமான விபரங்கள் அடங்கிய பாடம் ஒன்றினை சேர்க்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியை கினிகே அம்மையார் தெரிவித்துள்ளார். இவைகளினால் ஏற்படும் அனர்த்தங்களைப் பற்றியும் போதிக்கப்படும் என் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம்(வ.து)

## கிராமிய வங்கிக்கிளை புதிதாக ஆரம்பித்தல்

எமது சங்க தொழிற்பரப்பில் வசிக்கும் அங்கத்தவர்களினதும், பொதுமக்களினதும் நலன்கருதியும், அவர்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கோடு கிராமியவங்கியில் தமது கணக்கில் கூடுதலான பணத்தை சேமம், வைப்புக்களாக வைத்திருக்கும் அங்கத்தவர்களுக்கு முதலீட்டு வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கோடு எதிர்காலத்தில் தொழில் முயற்சிக்கான கடன் திட்டங்களை அமுற்படுத்துவதற்கும் எமது சங்க தலைமைக் காரியாலயத்தில் கிராமிய வங்கிக்கிளை ஒன்று எதிர்வரும் 2005.01.27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.14 முதல் 11.00 மணிவரையான சுபவேளையில் திறக்கப்படவுள்ளது. எனவே அன்றைய தினமோ அல்லது அதறகுப் பின்னரோ வங்கிக்கு வருகைதந்து கணக்கினைத் திறப்பதற்கு ஆகக் குறைந்த தொகையாக ரூபா 500/=ஐச் செலுத்தி கணக்கினைத் திறந்துவங்கியின் வாடிக்கையாளராக இணைந்து கொள்ளுமாறு அன்புடன் உங்களை அழைக்கின்றோம்.

தலைவர்,
மு.புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம்,
புதுக்குடியிருப்பு.

(சி-11222)





# கல்முனை கரையோரப்பிரதேசத்தை

# அதி உயர் அனர்த்தப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்துக!

## சாய்ந்தமருது சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை கோரிக்கை

சுனாமிப்பேரலையினால் பேரழிவுக் குள்ளாகியிருக்கும் கல்முனை கரையோரப் பிரதேசத்தை அதி உயர் அனர்த்தப் பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் சாய்ந்தமருது சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை கோரிக்கை விடுத்திருக்கிறது. இது தொடர்பாக சுனாமி அனர்த்த முகாமைத்துவச்சபை சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

கடற்பேரலையினால் இலங்கையில் பலியான சுமார் 39 ஆயிரம் பேரில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கல்முனைப் பிராந்தியத்திலேயே மரணித்துள்ளனர். இந்த எண்ணிக்கையானது மொத்த எண்ணிக்கையில் 33 சதவீதமாகும். சாய்ந்தமருது, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, இஸ்லாமாபாத், கல்முனைக்குடி, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், திருக்கோவில், பொத்துவில் போன்ற பிரதேசங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதிகள் சுனாமி அனர்த்தத்தினால் சுக்கு நூறாகி சீரழிந்து விட்டது.

எமது நாட்டிலுள்ள பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களை விட அம்பாறை மாவட்டத்தின் கல்முனைக் கரையோரப் பிராந்தியமே பல மடங்கு அழிவைக்கண்டிருக்கிறது. தொழிற்துறைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பன பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தின் மீள் கட்டுமானப்பணிகளுக்கான திட்டங்கள் எதனையும் அரசாங்கத்தால் இன்னும் முன்வைக்கப்படவில்லை. சுனாமிப்பேரலையால் பேரழிவுக் குள்ளாகியுள்ள கல்முனைப்பிராந்தியம் அதியுயர் அனர்த்தப்பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டு இப்பகுதியின் நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பவற்றிற்காக விசேட திட்டங்கள் வரையப்படல் வேண்டும்.

அரசு தென்னிலங்கையில் காட்டும் அக்கறையை விட கல்முனைக்கரையோர மாவட்டத்திலேயே கூடிய கவனம் செலுத்த வேண்டிய தார்மீகக் கடமையைக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னோடியாக இப்பிரதேசம் அதியுயர் அனர்த்தப் பிரதேசமாகப் பிரகடனம் செய்வதற்கு தாங்கள் முன்வரல் வேண்டும். இவ்வாறு சாய்ந்தமருது சுனாமி அனர்த்த முகாமைத்துவச்சபை சனாதிபதியை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய கடிதத்தின் பிரதிகள் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## நீர்முகாமைத்துவம்தொடர்பான தீர்மானம்

# அமைச்சரவை அங்கீகாரம் குறித்து ஜே.வி.பி–சு.க முரண்பாடான தகவல்

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முறுகல் வலுப்பெற்றுள்ளது. கடந்த டிசம்பர் 23 ஆம் திகதி நீர்முகாமைத்துவம் என்பது தொடர்பில் தாம் சமர்ப்பித்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஆற்றுப்படுகைத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சுனாமியின் காரணமாக அதனை உடனடியாக வெளியிடமுடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் அன்றைய தினம் அவ்வாறான எந்தஆலோசனையையும் அமைச்சரவை அங்கீகரிக்கவில்லை என விவசாயத்துறை அமைச்சரும் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (32)

# தொலைபேசிகள் செயலிழப்பு

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையக தொலைபேசிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட திடீர் மின்னல் தாக்கத்தினால் செயலிழந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இராணுவ தலைமையகத்தின் முக்கியமான தொலைபேசி தொகுதியொன்று மின்னல் தாக்கத்தினால் இவ்வாறு செயலிழந்து போயுள்ளதனால் இத் தொலை பேசித் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட 57 தொலைபேசிகள் இயங்கவில்லை தொலைத் தொடர்பு தொழில் நுட்பவியலாளர்கள் குழுவொன்று தொலைபேசி சேவையை சீர்செய்ய மேற்கொண்ட முயற்சியும் நேற்று முன்தினம் மாலை வரை பயனளிக்கவில்லை.

இதனால் இராணுவ தலைமையகத்தின் பல்வேறு செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.


## சுனாமியால் பாதிக்கப்பட்டு நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்குத் தேவைப்படும் மரவகைகள் உடனடியாக வழங்கப்படும்

வீடுகள் அமைக்கத் தேவையான தென்னை மர தீராந்தி, சிலாகை மற்றும் பலகைகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வடபகுதியில் எப்பகுதிக்காயினும்
நியாயமான விலையில் கொண்டு வந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
லலித் செனவிரத்ன
B.M.C. வுட் ஹௌவுஸ்
683, கொழும்பு வீதி, இலுக்வத்த,கடுகண்ணாவ.
தொலைபேசி : 0777-712923
FAX : 0812579138
(5605)

# மும்பாய் அருகே கோவில் திருவிழாவில் நெரிசலில் சிக்கி 350 பேர் பலி; 400 பேர் காயம்!

(புதுடில்லி)


மும்பாய் அருகே உள்ள காலுபாய் கோவில் பௌர்ணமி விழாக் கூட்டத்தில் சிக்கி 350 [illegible] பலியானார்கள். மராட்டிய மாநில தலைநகர் மும்பையில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ளது [illegible] என்ற நகர் சாதாரா



மாவட்டத்தை சேர்ந்தது. அங்குள்ள- காலுபாய் கோவிலில் சில தினங்களாக திருவிழா நடந்து வந்தது. இறுதி நாளான நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டம் அலை மோதியது. லட்சம் பக்தர்கள் திரண்டு இருந்தனர். பூஜை நேரத்தில் சாமி தரிசனத்துக்காக கூட்டம் முண்டியடித்தது. அப்போது ஏற்பட்ட நெரிசலில் பக்தர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர் பெண்களும், குழந்தைகளும் அலறித்துடித்தனர். எங்கும் அழுகுரலாக இருந்தது. நெரிசலிலும் மூச்சு திணறலிலும் ஏராளமானவர்கள் இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

நெரிசலில் 350 பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அவர்களில் பெண்களும், குழந்தைகளும் அதிகம் என்று சாதாரா பொலிஸ் பொறுப்பதிகாரியும் மாவட்ட கலெக்டரும் கூட்டாக நிருபர்களிடம் கூறினர். இது தவிர 400 பேர் படுகாயம் அடைந்தனர் அவர்கள் வாய் நகர் மற்றும் சாதாரா நகரில் உள்ள பல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மராட்டிய முதலமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக், துணை முதல்வர் ஆர்.ஆர். பட்டீல் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த பரிதாப சம்பவம் மராட்டிய மாநிலம் முழுவதும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபா 2 இலட்சம் வழங்கப்படும் படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூபா 50 ஆயிரமும் சிறிகாயம் அடைந்தவர்களுக்கு தலா 20 ஆயிரமும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் தேஷ்முக் அறிவித்துள்ளார்.



சென்னை மத்திய புகையிரத நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடி குண்டு கைப்பற்றப்பட்டதையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பயணிகளின் பொருட்கள் சோதனை செய்யப்படுகிறது.

# ஜெயேந்திரர் உட்பட 24 பேருக்கும் குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்க ஏற்பாடு

(புதுடில்லி)

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில் முகாமையாளர் சங்கரராமன் கொலை வழக்கில் கைதான 24 பேர் மீதான குற்றப்பத்திரிகையின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் 3ஆம் திகதி குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்கப்படவுள்ளன. பிணையில் வெளிவந்துள்ள ஜெயேந்திரர் உட்பட 24 பேருக்கும் 1873 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை பிரதியெடுக்கும் பணி தற்போது இடம் பெற்று வருகின்றன.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்தியக் குடியரசு தினவிழா

(புதுடில்லி)

இந்தியாவின் 56 ஆவது குடியரசு தினவிழா நேற்று நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

டில்லியில் நடந்த குடிரசு தின விழாவில் சனாதிபதி அப்துல் கலாம் தேசியக் கொடி ஏற்றினார் இதைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பை சனாதிபதி பார்வையிட்டார். இந்தியாவின் இராணுவ வலிமையை விளக்கும் வகையில் பாதுகாப்புப் படையினரின் பீரங்கிகள், ஏவுகணைகள் ஆகியவை பேரணியில் அணிவகுத்தன. மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் பேரணியில் இடம் பெற்றன.

இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பூடான் மன்னர் ஜிக்மே வாஞ்சுக் கலந்து கொண்டார். பேரணியை அவர் பார்வையிட்டார். விழாவில் துணை சனாதிபதி பைரோன்சிங் செகாவத், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா, மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு குடியரசு தின விழா நிகழ்ச்சிகள் 45 நிமிட நேரம் குறைக்கப்பட்டது. குடியரசு தின நிகழ்ச்சிகளை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டு இருந்ததாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து டில்லி முழுவதும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. குடியரசு தினவிழா நடைபெறும் ராஜ பாதையில் 20 ஆயிரம் பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பேரணி நடக்கும் போது உலங்குவானூர்திகளில் இராணுவ வீரர்கள் பறந்தபடி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். 3 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள உயரமான கட்டடங்களின் உச்சியில் பொலிசார் இயந்திரத் துப்பாக்கிகளுடன் நின்றபடி கண்காணித்தனர்.

விழா முடியும் வரை அந்தப் பகுதியில் விமானங்கள் பறக்கவும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.


## தமிழீழப் போக்கு வரவுக்கழகம்

சுமையுந்து / இழுபொறி

ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள்:-

01. கல்வித்தகைமை:-ஆண்டு 08

02. அகவை:-23தொடக்கம் 35வரை

03. உயரம்:-05அடி 05அங்குலம்

04. நிறை:-55kg

குறிப்பு:-

01. விண்ணப்ப முடிவுநாள்:-05.02.2005

02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 08.02.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழக நடுவப்பணிமனையில் நடைபெறும்.

03. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

04. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை, புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நேரக் கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி11097)



சகல விதமான இரண்டாம் தர கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

E-mAx

வாடகைக்கு
P ii
P iii
P iv
Multimedia Projector
Home Studio System
Digital Camera
Video Camera

E-mAx

சகல விதமான கணனிகளும் உதிரிப்பாகங்களும் விற்பனையாளர்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

E-mAx
குருமன்காட்டுச்சந்தி,
குருமன்காடு,
வவுனியா.

(சி-11143)

# சுனாமி நலநிதி கிரிக்கெட் போட்டி நியூசிலாந்துக்கு 4 விக்கெட் வெற்றி



நியூசிலாந்தில் நேற்று நடைபெற்ற சுனாமி நலநிதி சேகரிப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணி உலக 11 பேர் அணியை 4 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

ஹமில்டனில் நடைபெற்ற இப் போட்டியில் நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்களான கிறிஸ் கெயான்ஸ், ஜெப்வில்சன் ஆகியோரின் பந்துவீச்சில் உலக 11 பேர் அணி அனைத்து விக்கெட்டையும் 20.5 ஓவரில் இழந்து 81 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணியில் நிக்நைட் மட்டுமே அதிக பட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றார். கிறிஸ் கெயான்ஸ் 12 ஓட்டங்களை கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



பதிலுக்கு 82 ஓட்டங்கள் என்ற சுலபமான வெற்றியிலக்கு நோக்கி நியூசிலாந்து ஆடினாலும் 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையிலேயே வெற்றியிலக்கை அடைந்தது.

உலக அணியில் இயன் ஹார்வி, கிறேக் பிலியெட், கிறேம் கிக், குமார் சங்கக்கார ஆகியோர் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்தது. குறிப்பிடத்தக்கது. நிக்நைட்டைத் தவிர, ஜயசூரியா, மத்தியூ இலி யாட் இருவருமே இரட்டை எண்களிலான ஓட்டத் தைப் பெற்றனர். இதன் மூலம் நியூசிலாந்து தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

# இறுதி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷிக்கு ஆறுதல் வெற்றி



பங்களாதேஷ்- சிம்பாப்வே அணிகளுக்கிடையில் சிட்டகொங்கில் நேற்று நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ராஜன்சாலே 77 ஓட்டங்களையும், முகமட் 38 ஓட்டங்களையும்,பசார் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ரெயிலர்,உட்சயா,பன்னியங்காரா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிம்பாப்வே 47.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களையே பெற்றது.

துடுப்பாட்டத்தில் றிக்கேர்ஸ் 51, தைபு 46 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மன்சூர், இஸ்லாம்றனா 4 விக்கெட்டுக்களையும்,மொறட்சயா ஹுசைன், காலித் மொகமட் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




# ஐவருக்கு பத்மஸ்ரீ விருது



அனில் கும்ளே-ரத்தோருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

குடியரசு தினவிழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம்பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதில் விளையாட்டு துறையைச் சேர்ந்த 5 பேருக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது. கிரிக்கெட் வீரர் அனில்கும்ளே, ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற ராஜ்ஜவர்தன் சிங்ரத்தோர், முன்னாள் தடகள வீரர் குர்பரன்சிங், முன்னாள் பாட்மிட்டன் வீரர் கோபி சந்த், ஸ்கை டைவர் ரேச்சல் தமாஸ் ஆகியோர் பத்மவிருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## வி.பி. கிண்ண முக்கோணத் தொடர்

# பிரெட்லி' கிளெஸ்பி சிறப்பு பந்து வீச்சு,துடுப்பாட்டம்

# அவுஸ்திரேலிய அணிக்கு 73 ஓட்ட வெற்றி




மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் வி.பி. முக்கோணக்கிண்ணத்துக்கான மேற்கிந்திய தீவுக்கு எதிரான கடைசி லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 73 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

அடிலயிட்டில் நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 8விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கட்ரிச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களையும், பிரெட்லி, கிளெஸ்பி ஆட்டமிழக்காது 38, 44 ஓட்டங்களை முறையே பெற்றனர்.

பந்து வீச்சில் கொலின்ஸ் 43 ஓட்டங்களை கொடுத்து 5விக்கெட்டுக்களையும், பிரவோ இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



வெற்றி இலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்தியதீவு ஆரம்பம் முதலே சரிவை சந்தித்ததுடன் 44.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் சந்தர்போல் 55 ஓட்டங்களையும், சர்வான் 39 ஓட்டங்களை, அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெட்லி 38 ஓட்டங்களை கொடுத்து 4விக்கெட்டுக்களை கைப்பற்றினர். கிளெஸ்பி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



போட்டியின் சிறப்பாட்டக்காரராக பிரெட்லி தெரிவானார். மேற்படி தோல்வி மூலம் மேற்கிந்தியதீவு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் சிறப்பு வெற்றியை பெற்றால் மாத்திரமே இறுதிப் போட்டியில் மோதும் வாய்ப்பை பெறும்.

# வெற்றிக்கு உழைத்த வீரர்களுக்கு அணித்தலைவர் வோகன் பாராட்டு



தோல்வி என்ற நிலைக்கு செல்லாமல் இறுதியில் போட்டியைச் சமன் செய்து தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற உழைத்த தமது அணி வீரர்கள் அனைவரையும் இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் பாராட்டியுள்ளார்.

இறுதிநாள் மாலை 185 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடினாலும் 20 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டைப் பறிகொடுத்தமை அச்சத்தை அளித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். சுமார் 40 நாட்கள் ஓய்வின்றி போட்டிகளில் பங்கேற்று களைத்துப் போயிருந்த வீரர்கள் இந்தத் தொடரை 2-1 என்ற வகையில் வெற்றியீட்டித்தந்திருப்பதாக அவர் புகழ்ந்தார். மேற்கிந்தியத் தீவுகளை இரண்டுமுறையும் கடினமான நியூசிலாந்தையும் வென்று இறுதியில் தென்னாபிரிக்கா அணியுடன் ஆடவந்தது கடினமான வேலை என்று கூறிய வோகன் போட்டிகளில் வெற்றியும் தோல்வியும் சகஜம் என்றார்.

# முன்னணி கால்பந்து அணியான ஆர்சேனலுக்கு அபராதம்




முன்னணி கால்பந்து கழக ஆர்சேனலுக்கு ரூபா 9 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் கால்பந்து லீக் போட்டிகளில் பற்கேற்கும் முன்னணி கிளப் அணிகளில் ஆர்சேனல் முக்கியமானது. நட்சத்திர வீரர்கள் மற்றும் வளரும் இளம் வீரர்களை அதிகப் பணம் கொடுத்து தங்கள் அணிக்கு இந்த கழகங்கள் அழைத்துக்கொள்வது வழக்கம்.

நெதர்லாந்தைச் சேர்ந்த 18 வயது அபெய் என்ற இளம் வீரரை ஆர்சேனல் கழகம் தனது அணியில் சேர்த்தது. இது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஒரு புதிய வீரரைத் தங்கள் கழகத்தில் சேர்க்க வேண்டுமானால் ,கால்பந்து அமைப்பு விதிகளின்படி,சம்பந்தப்பட்ட வீரரிடம் நேரடியாகப் பேச்சு வார்த்தைநடத்தி அழைக்கவேண்டும். அல்லது அங்கீகாரம் பெற்ற ஏஜென்ட்டுக்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்திச் சேர்க்க வேண்டும்.

ஆர்சேனல் கழகம் எதுவும் செய்யாமல், அங்கீகாரமற்ற ஏஜென்ட் மூலம் புதிய வீரரைத் தனது அணியில் சேர்த்துவிட்டது. இதற்காக பிரிட்டன் கால்பந்து அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தவறான இந்த நடவடிக்கைக்காக,ஆர்சேனல் கழகத்திற்கு ரூபா 9 இலட்சம் அபராதமும், எதிர்காலத்தில் இந்தத் தவறுகள் தொடரும் பட்சத்தில் தடை உத்தரவு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

# பாக்.தொடரில் விளையாடத் தயார்

பாலாஜி




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்பவர் எல். பாலாஜி. தமிழகத்தைச் சேர்ந்த இவர் கடந்த ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின்போது முத்திரை பதித்தார்.

இங்கிலாந்தில் செப்ரெம்பர் மாதம் நடந்த ஒருநாள் தொடரில் எல். பாலாஜி காயம் அடைந்தார். இதனால் அவர் ஐ.சி.சி போட்டி அவுஸ்திரேலியத் தொடர்,தென்னாபிரிக்க தொடர் ஆகியவற்றில் விளையாடவில்லை.இந்நிலையில் காயத்தில் இருந்து முற்றிலும் குணமடைந்து உடல் தகுதியுடன் இருப்பதால் பாகிஸ்தான் தொடரில் விளையாடத் தயாராக இருப்பதாக எல். பாலாஜி கூறியுள்ளார்.



அண்மையில் நடைபெற்ற பிரிமியர் உதைபந்தாட்டப் போட்டியில் செல்சியா வெற்றிபெற்றதையடுத்து வலுவையும் சிறப்பையும் நிரூபித்துள்ள செல்சி அணித்தலைவரும்கோல் காப்பாளருமான பீட்டர் செக்.



## சிந்தனைக்கு

பேரினவாதச் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுது தான் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையை சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## சுருட்டும் முயற்சி......

வாய்ப்பைப் பயன்படுத்திச் சுருட்டிக் கொள்ளலாம் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முற்பட்டுள்ளது போல் தெரிகின்றது. சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து சிறிலங்காவிற்கு உதவ பல அரசுகள் முன்வந்துள்ள நிலையில் சுனாமி அனர்த்தத்தின் பெயரால் அதிகரித்த நிதியுத வியைப்பெற அரசாங்கம் முற்பட்டுள்ளதாக எண்ண வைக்கின்றது.

சுனாமி பாதிப்புக் குறித்து சிறிலங்கா அரசு போலியானதொரு மதிப்பீட்டு அறிக்கையையே வெளிப்படுத்த முற்பட்டுள்ளது என்பதை அரசாங்கத் தரப்புத் தகவல்களே அம்பலப்படுத்தி விடுபவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, சுனாமி அனர்த்தத்தினால் இறந்தவர்கள் தொகை சுமார் 30,000 ஆயிரம் பேர் என்றே முதலில் அறிவிக்கப்பட்டிருந்ததாயினும் ஒரு நாள் இரவில் இத்தொகை திடீரென 7000 பேரால் அதிகரித்திருந்தது. இதேபோன்றே அனர்த்தத்திற்கு உள்ளான பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்திற்கு முதலில் 15,000 கோடி கோரிய அரசாங்கம் தற்பொழுது 35,000 கோடி ரூபாய்களைக் கோருகின்றது.

அரசாங்கத்தின் இப்புள்ளி விபரங்களில் திடீரென ஏற்பட்ட மாற்றத்திற்கு உதவி வழங்குவோரிடம் இருந்து அதிகளவு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதே நோக்கமாகும். அல்லாதுவிடில் ஒரு வீதி திருத்துவதற்கு ஆறு தடவைகள் நிதியுதவி கோரி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கமாட்டாது.

அதாவது, சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம், சுனாமி அனர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுந்துவிடலாம் எனத் திட்டமிடுவது போல் தெரிகின்றது. ஏற்கனவே, சுனாமி அனர்த்தத்திற்கு கிடைக்கப் பெற்ற நிதியுதவிகளால் ஏற்கனவே உருவாகியிருந்த தீவிர நெருக்கடியிலிருந்து அரசாங்கம் சற்று விடுதலை – அதாவது அரசின் மீதான நெருக்கடி சற்றுத் தளர்வடைந்துள்ளது என்றே கூறலாம்.

இந்நிலையில்தான், முற்றாக நெருக்கடியில் இருந்து விடுபடும் நோக்கில் இழப்பீடு தொடர்பான மதிப்பீட்டில் அதிகரிப்புச் செய்ய சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனைக் குழு தீர்மானித்திருத்தல் வேண்டும். ஆனால், இது சாத்தியமானதொன்றாக இருக்குமா என்பது சந்தேகமே.

ஏனெனில், சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளும், நிதி அமைப்புக்களும் தமது மதிப்பீடு எதுவும் இன்றி நிதி உதவிகளை வாரி வழங்கிவிடப் போவதில்லை. உதவி வழங்குவோர் வாரி வழங்கினும்கூட அவற்றின் பயன்பாடு குறித்தும் அவதானம் செலுத்தாமல் இருக்கப்போவதில்லை.

இது ஒருபுறம் இருக்கத் தற்பொழுது அரசாங்கம் புனர்நிர்மாணப் பணிகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் இணைத்துக் கொள்வதற்குமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் சர்வதேச நிதியுதவியில் அரசு கொண்டுள்ள அக்கறை இதன் மூலம் வெளிப்படும்.

அதாவது, வெளிநாட்டு அரசுகளும் சரி, அரச சார்பற்ற நிதி நிறுவனங்களும் சரி சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதியுதவி வழங்க இணக்கம் தெரிவித்திருப்பினும் அவை வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள அழிவிற்கும் உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துபவையாகவே உள்ளன. அதாவது தமது நிதியுதவி சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என அவை கோருபவையாக உள்ளன. இவை நிதி உதவிக்கான நிபந்தனையாக இல்லாதுபோனாலும் அழுத்தம் கொடுக்கப்படும் ஒன்றாகவே உள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலை நிலவுகையில் தான், பெரும் நிதி எதிர்பார்க்கைகளுடன் கூடிய ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளையும் நிவாரணப் பணிகளில் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளனரோ என்ற சந்தேகம் எழுவதாகவுள்ளது. இவ்வாறு சந்தேகிப்பதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. ஏனெனில், அரசாங்கம் நிவாரணப் பணிகளில் புலிகளை இணைப்பது பற்றிப் பேசுகையில் ஆயுதப் படைத் தரப்போ நிவாரணப் பணிகளில் கெடுபிடிகளை அதிகரித்துள்ளது. குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படையினரின் அடாவடித்தனம் அதிகரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும்.

இந்நிலையில், நிவாரணப் பணி விடயத்தில் அரசாங்கத்துடன் இணைந்த செயற்பாடு குறித்து தீவிரமாகச் சிந்திக்க வேண்டியது அவசியமானதே. ஏனெனில் வெளிநாட்டு நிவாரண நிதி மூலம் அரசாங்கம் தனது நோக்கத்தை நிறைவு செய்வதையே இலக்காகக் கொண்டுள்ளது.

# புலிகளை அமெ. கப்பலுக்கு அழைத்துச் சென்றமைக்கு தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு கண்டனம்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பிரிவு பொறுப்பாளரை அமெரிக்கப் படையினர் தமது கப்பலுக்கு அழைத்துச் சென்றதாகவும் அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனவும் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் வணக்கத்திற்குரிய எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை வந்துள்ள வெளிநாட்டுப் படைகள் இங்கு அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளரை அமெரிக்கப் படைகள் எச்.எம்.எஸ் சத்தாம் என்ற தமது கப்பலுக்கு அழைத்துச் சென்று காண்பித்துள்ளதாகவும் இது தொடர்பில் தமது கடும் விசனத்தை தெரிவிப்பதாகவும் எல்லே குணவன்ச தேரர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனும் தமிழர் புனர்வாழ்வு கழகத்துடனும் அமெரிக்கப் படைகள் சந்திப்புகளை நடத்துவது நாட்டின் இறைமையை பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (32)

# வெளிநாட்டுப் படைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்

*-ஜாதிகஹெலஉறுமய கோரிக்கை-*

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டுப் படைகளின் நடவடிக்கைகள் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் இலங்கையில் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுவது குறித்து தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவினர் இந்தப்படைகளின் ஏனைய செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டுப் படைகள் கொண்டுவந்துள்ள இராணுவ உபகரணங்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு பாதகம் ஏற்படலாம் என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (32)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் கற்பித்தல் முறைப்பயிற்சி வகுப்பு

ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆங்கிலப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தோருக்கான கற்பித்தல் முறை பயிற்சி வகுப்பு நடை பெறவுள்ளது. இவ்வாண்டு சனவரி 24ஆம், 25ஆம், திகதிகளில் நடைபெற்ற ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றாத முல்லைத்தீவு, கிளிநொச்சி,மடு, துணுக்காய் கல்வி வலய, மருதங்கேணி கோட்ட ஆசிரியர்களுக்கான கற்பித்தல் முறை பயிற்சி வகுப்பு சனவரி 29.01.2005, 30.01.2005 ஆகிய இரு தினங்களில் நடத்துவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விரு தினங்களும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறி பூர்த்தி செய்தவர்களுக்கு மட்டுமே சித்தியடைந்தமைக்கான சான்றிதழும், ஒலிப்பதிவு நாடாவும் வழங்கப்படவிருப்பதால் உரியவர்கள் தயவு செய்து இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி தமது ஆற்றலை வளம்படுத்திக் கொள்ளுமாறு வன்னிக் கல்விப் புனருத்தாரண செயற்றிட்ட தொழில்நுட்ப ஆலோசகர் கேட்டுக் கொள்கின்றார்.

## அம்பாறை...

குயிலின்பன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆழிப்பேரலையில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நேற்றை நிகழ்வுகளின் ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது சிறிலங்காப் படையினர் கெடுபிடிகளில் ஈடுபட்டதாக தெரிய வருகிறது. வீதிகளில் கட்டப்பட்டிருந்த கறுப்புக்கொடிகளை அகற்றி இந்நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டாமென அச்சுறுத்தியுள்ளனர்.இதனைத் தொடர்ந்து போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினருக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன தெரிவித்தார். அம்பாறையில்படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் துக்க நாள் நிகழ்வு கள் அனுஷ்டிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட...

வாழ்கின்ற உறவுகளையும் சோகத்திலிருந்து விடுபட வைத்ததைக் கண்கூடாகப் பார்த்தோம். உண்மையில் இழக்கக் கூடாததை நாங்கள் இழந்து விட்டோம். மீண்டும் எழுகின்ற இந்த முயற்சிக்கு சகல மக்களும் பாதிக்கப்பட்ட மக்களோடு பின்னிப் பிணைந்து இவர்கள் மீள் எழுகின்ற நடவடிக்கைக்குஉதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். உண்மையில் இந்த ஆழிப்பேரலையில் 2,80,000 மக்கள் ஒரு சொற்ப நேரத்திற்குள் அழிந்திருக்கின்றார்கள். அதிலும் குறிப்பாக வடகிழக்குத் தாயகத்தில் இருபதாயிரம் மக்கள் இறந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்த நகரத்தில் மூவாயிரத்து மூந்நூறுக்கு மேற்பட்ட மக்கள்மூன்று நிமிடத்திற்குள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மிகவும்வேதனையானதும், எந்தக்காலத்திலும் மறக்க முடியாததுமான ஒரு சோக நிகழ்வு. இன்று எங்களின் மக்கள் தமது வாழ்விடங்களில் மீண்டும் சென்று வாழ்வதற்குத் தயராகத்தான் இருக்கிறார்கள். அவர்களோடும் மீட்புப்பணி நடவடிக்கையில் பங்கெடுத்த அந்த மக்களோடும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் இங்கு வந்து வாழ்வதற்கு எல்லோரும் தயாராகத்தான் இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இது இவ்வாறிருக்கக் கடந்தவாரம் இந்த நாட்டினுடைய சனாதிபதி சந்திரிகா அம்பாந்தோட்டையில் வீடமைப்புக்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறார். அங்கு துரிதமான முன்னேற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றது. அம்பாந்தோட்டை மட்டும்தானா பேரழிவைச் சந்தித்தது? ஏன் வடக்குகிழக்கு மாகாணத்திலே . முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு,கல்முனை மாவட்டங்கள் இப்பேரழிவைச் சந்திக்கவில்லையா? நாங்கள் எப்படிப் புறம்தள்ளப்படுகின்றோமோ அதுபோன்று இஸ்லாமியத் தமிழர்களும் இந்த அரசினால் புறந்தள்ளப்படுகின்றார்கள். இன்று ஒரு மாதம் கடந்த நிலையில் தான் நோர்வேயினுடைய வருகையும் அந்த வருகையோடு பல நாடுகளினுடைய அழுத்தங்களும் இந்த சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளோடு ஒரு செயலணிக்குழுவொன்றை ஏற்படுத்தி முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகிறோம்.

இந்த சுனாமியால் ஏற்பட்ட அழிவிலிருந்து மக்கள் மீள்வதற்கு முதல் இந்த அழிவைக் கொண்டு அரசியல நடத்துவதற்கு இந்த நாட்டினுடைய சனாதிபதியும் தமது கடற்படையைக் கட்டியெழுப்ப தயாசந்தகிரியும் எடுத்துள்ள முயற்சி தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. இதிலிருந்து மக்கள் விடுபட முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குத் தேர்தலை தள்ளிப்போடப் போவதாக சனாதிபதியின் கருத்து.இது சுனாமி ஏற்படுத்திய அழிவினூடாக உருவாக்கப்படுகின்ற அரசியல் நாடகம், பெரும்பொருளாதார நெருக்கடியிலிருந்து அரசாங்கம் சுனாமியால் அழிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப வந்த நிதிகளைக் கொண்டு கடற்படையைக்கட்டியெழுப்பப் பெருமளவு நிதியை சுனாமி நிதியிலிருந்து கோரியிருக்கின்றார் தயாசந்தகரி ஆனால் இங்கு ஒரு மாதம் கடந்த பின் இன்றும் கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் அவற்றை விரைவாக அகற்றக் கூடிய வசதி எம்மிடம் இல்லை. இது பலமுறை அரசிடம் கோரப்பட்டும் அவை வந்தசேரவும் இல்லை. எது எவ்வாறு இருப்பினும் நாம் எமது சொந்தக் காலில் நிற்க மீண்டும் உறுதியுடன் செயற்பட்டால் மட்டுமே நாம் மீள முடியும்.இந்நாளில் இறந்த உறவுகளை நினைவு கூருவதோடு மீண்டும் புதிய நகரைக் கட்டியெழுப்ப அயராது உழைக்க வேண்டுமென்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். (ச)

# யாழ்.மாவட்டத்தில் நடந்த நினைவு நிகழ்வில்...








## அரசிற்கு எதிராக மன்னாரில் பேரணி

மன்னார் மாவட்டத்தில் நாளை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெற இருக்கின்றது. சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேசத்தால் வழங்கப்படும் உதவிகளை சிறிலங்கா அரசு இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்துவதைக் கண்டித்தும், உலகின் சுனாமி நிவாரணநிதிகள் பாதிக் கப்பட்ட தமிழர் பகுதிகளிற்கு செல்லவிடாமல் சிறிலங்கா அரசு தடுப்பதைக் கண்டித் தும்.மற்றும் எமது மாவீரர் நினைவு நிகழ்வுக ளில் மக்களின் உணர்வுகளை மதிக்காது மக்கள் மீது தாக்குதல் நடத்தும் சிறிலங்காப் படைகளின் மிலேச்சத்தனமான போக்கைக்கண்டித்தும் இப்பேரணி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்பேரணியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பல பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இப்பேரணி தொடர்பாக மன்னார் மாவட்ட தொழிற் சங்கங்களில் ஒன்றியம் மன்னார் மாவட்ட பெண்கள் அமைப்புகள், மன்னார் மாவட்ட தமிழ் மாணவர்கள் ஒன்றியம் ஆகியனதுண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. காலை 10.00 மணிக்கு மன்னார் நகரப் பகுதியில் இருந்து மேற்படி பேரணி ஆரம்பமாக ஏற்பாடாகியிருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.(18)

## கடற்படை...

சேர்ந்த இரு மீனவர்களே தாம் தாக்கப்பட்டமை தொடர்பாக அம்முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடற்படையினரால் தாம் தாக்கப்பட்டது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலைய சோதனைச் சாவடியில் முறைப்பாடு செய்யச் சென்றவேளை அம்முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

## உந்துருளி...

உயிரிழந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு நீதிமன்ற நீதியாளரும்,காவல்துறையினரும் சென்று விசாரணைகளைமேற்கொண்டுள்ளதுடன் தொடர்ந்தும்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (08)

## தாய், தந்தையரை...

பதிவுப் புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் வைப்புப் புத்தகங்களை தமிழீழ கடற்படைத்தளபதி கேணல் சூசை அவர்கள் வழங்கினார். (ச,20)

## சுனாமியால் உயிரிழந்தோர்...

ஏற்றப்பட்டன. பின்னர் நினைவுப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்குடியிருப்பில்...

முல்லை மாவட்டக் கரையோரக்கிராமங்களில் சுனாமி அனர்த்தத்தால் பலியானவர்களின் ஒரு தொகுதியினர் அடக்கம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பில் நேற்று காலை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

புதுக்குடியிருப்பு ஓட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோவிலுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்ட புனித இடத்தில் காலை 8.50 மணிக்கு புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் வீ.கனகசுந்தர சுவாமி அவர்களின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இச்சோக நிகழ்வில் பொதுச்சுடரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா ஏற்றிவைக்க, ஈகச்சுடரை புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தலைவர் அருள்நாதர் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தேசியக்கொடியை முல்லை மாவட்ட அரசில் துறைதுணைப்பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றிவைத்தார். அடுத்து உறவினர்கள், உருத்துடையோர், நண்பர்கள் பொதுமக்கள் என அனைவரும் சுடர் ஏற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். இந்த நேரம் அந்தப் புனித இடம் ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது. உறவு களைப் பிரிந்தவர்கள் அழுத அந்த சோகக்காட்சி அனைவரது நெஞ்சங்களையும் தொட்டது.

இதேவேளை செந்தளிர் சிறுவர்களது மலர் அஞ்சலி நிகழ்வானது மிகவும் சோகமான ஓர் நிகழ்வாக இருந்தது.

தொடர்ந்து இந்நிகழ்வில் இராமசாமிக் குருக்கள் அவர்களும் தாளையடி உதவிப்பங்குத்தந்தை கான்ஸ்போவர் அவர்களும் அருட்சகோதரி ரேவதி அவர்களும் பிரார்த்தனை உரை நிகழ்த்த புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா, வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் செயலாளர் சி.வேதவனம், காவல்துறையின் காணிப்பிரிவுபொறுப்பளர் கானகன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

### உடுத்துறையில்...

சுனாமிக் கடல் பேரலைகளில் சிக்கி உயிரிழந்த வடமராட்சி கிழக்கு மக்களை நினைவுகூர்ந்து அவர்களை அடக்கம் செய்த உடுத்துறைக் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக்காலை சுனாமிப் பேரலைகள் மூர்க்கமாக எழுந்து மூசியடித்த 8.50 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மணி ஒலிக்கவிடப்பட்டது.அதனைத் தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. பொதுச்சுடரை தமிழீழக்கடற்படை தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். சமநேரத்தில் தமது உறவுகளின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட புதைகுழிகளின் முன்பாக நாட்டப்பட்டிருந்த தீபம் உறவினர்களால் ஏற்றப்பட்டது.

அடுத்ததாக உயிரிழந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் வைக்கப்பட்டிருந்த சுனாமி பேரலையில் உயிரிழந்தோர் நினைவுப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. மலர்மாலையை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பளர் கே.பி.றெஜி ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு முன்பாக உடல்கள் அடக்கம்செய்யப்பட்ட இடத்தில் நடைபெற்ற இந்நிழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பெருந்தொகையில் கலந்து கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தனர். தமிழீழதேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டிருந்தது. இந்நிகழ்வின் இறுதியில் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், மருத்துவப் பிரிவுப்பொறுப்பாளர், றேகா, மற்றும் பொறுப்பாளர்கள் போராளிகள் காவல் துறை உறுப்பினர்கள் பொதுமக்கள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

### முல்லை நகரில்...

சுனாமி அலையின் தாக்கத்தினால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 8.50 மணிக்கு முல்லைத்தீவு நகரப் பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வின் ஈகச்சுடரினை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா அவர்கள் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை தளபதி கேணல் ஜெயம் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து பொது ஈகச்சுடரினை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து பொது உருவப்படத்திற்கு மலர் மாலையினை வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அணிவித்தார். தொடர்ந்து மக்கள் தமது உறவுகள் நினைவான சுடர்களை ஏற்றி வணக்கம் செலுத்தியதோடு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதேவேளை சுனாமி அலை தாக்கிய நேரமாகிய 8.50 மணிக்கு கள்ளப்பாடு பாடசாலையின் இடிபாட்டோடு நின்றிருந்த சுவர்க்கடிகாரத்தினை அப்பாடசாலை அதிபர் இயங்கவைத்தார். அடுத்து தாக்கத்தினால் மன ரீதியான பாதிப்பிலிருந்து மக்களை மீட்கும் முகமாக மனநல ஆற்றுப்படுத்துனர்களினால் "எச்சத்திலும் எழுவோம்" எனும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கல்வி சார் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், அனர்த்தத்தின்போ[illegible] உயிரிழந்தவர்களின் உறவினர்கள், அரச, அரசசார்பற்[illegible]றுவனங்களின் பணியாளர்கள், போராளிகள், ஏனைய [illegible]பிரதேச மக்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து [illegible]ண்டு துக்கம் அனுஷ்டித்ததோடு வணக்கம் செலுத்திய[illegible]தயும் காண முடிந்தது. இங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் அமைவு வரைபடமும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. மேலும் இந் நிகழ்வில் நினைவுரையினை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களும் உரைநிகழ்த்தினார்.

### முள்ளியவளையில்...

இதேவேளை முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் சாவடைந்தவர்கள் புதைக்கப்பட்ட முள்ளியவளை கற்பூரப் புல்வெளிப் பகுதியிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. பிற்பகல் 3.40 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்விலும் இறந்தவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் புதைகுழிகளுக்கு மலர்தூவி சுடர்ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு துக்கம் அனுஷ்டித்தனர். இங்கு ஈகச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட விசேட ஆணையாளர் அவர்கள் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளை புதுக்குடியிருப்பு வலயஅரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பொதுச் சுடரினை போராளி மிரேஸ் அவர்கள் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மக்கள் தமது உறவுகளின் புதை குழிகளில் வைக்கப்பட்டிருந்த சுடர்களை ஏற்றி வணக்கம் செலுத்தினர்.

### யாழ்.இல்...

யாழ் வடமராட்சியில் மணற்காடு பகுதியைச் சேர்ந்த உயிரிழந்தோர் உடல்கள் புதைக்கப்பட்ட மணற்காடு சேமக்காலையில் நேற்று நண்பகல் 71 பேரினது நினைவாக 71 மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இடம் பெயர்ந்து முகாம் பகுதிகளில் தங்கியுள்ள அப்பகுதி மக்கள் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஏதுவாக வாகனங்கள் மூலம் அங்கு ஏற்றிச்செல்லப் பட்டிருந்தனர். கொளுத்தும் வெயிலில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் போராளிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்களென நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

தென்மராட்சிப்பகுதியில் தேசியஎழுச்சிப் பேரவைத் தலைவர் அருந்தவபாலன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன் மற்றும் கிறிஸ்தவ, இந்து மதத்தலைவர்கள் உட்பட பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதேசசெயலாளரும் சுடரேற்றினர்.

நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ் மாவட்ட தேசியஎழுச்சிப்பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

பொதுச்சுடரினை யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகளும்,ஏனைய சுடர்களை நல்லூர் யாழ்ப்பாணம் கோட்டஅரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் மற்றும் மும்மதத்தலைவர்களான நல்லை ஆதின முதல்வர், முஸ்லிம் மதகுரு மூபின், கிறிஸ்தவ மதகுரு செபஸ்ரியன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வலிகாமப்பகுதியில் உள்ள அரச திணைக்களங்களில் நண்பகல் நேரம் மெழுகுதிரி ஏற்றி நினைவு கூரப்பட்டது.

இதேவேளை "சுனாமி" அனர்த்தத்தினால் உயிரிழந்த பாடசாலை மாணவர்களை நினைவு கூருமுகாமாக அஞ்சலி நிகழ்வொன்று யாழ். கல்வித்திணைக்கள பொது மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினருடன் இணைந்து நடாத்தப்பட்ட இவ் அஞ்சலி நிகழ்வில் கல்வியாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர், மாணவியர் நினைவுத் தீபங்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.இதேவேளை யாழ். பல்கலைகழகம் உள்ளிட்ட கல்விக் கூடங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றிலும் நினைவு நிகழ்வுகளும், ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளும் இடம் பெற்றிருந்தன. அதேவேளை இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களிலும் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம் பெற்றது.

### திருமலையில்...

சுனாமி அனர்த்த ஒருமாத நினைவு தினத்தையொட்டி உயிரிழந்தோருக்குகான ஆத்மசாந்திப் பிரார்த்தனை திருகோணமலை,மூதூர் கிண்ணியா,குச்சவெளி,வெருகல் பிரதேச செயலர் பிரிவுகளில் விசேட வழிபாடுகள்,மௌன அஞ்சலி ஆகியவற்றுடன் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்புக்கள் சாம்பல்தீவில் நலன்புரி முகாம் பிரதேசத்தில் சிரமதான இயக்கம் ஒன்றை நடத்தின.சுனாமியால் பாதிக்கப்பட்ட திருமலை நகரில் இந்து, கிறிஸ்தவ,இஸ்லாமிய,பௌத்த வழிபாட்டுத் தலங்களிலும் விசேட வழிபாடுகள்,மௌனஅஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

### வவுனியாவில்...

ஆழிப்பேரலையில் பலியானோரின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு பூந்தோட்டம் நரசிம்மர் ஆலயத்தில் ஆத்மசாந்தி வேண்டி வழிபாடு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் நாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

(08,20,11,19,41,கா,27,லோ, சு,33,ச,21,25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது